Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி -23 07-07-2005 வியாழக்கிழமை ஓசை 139



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12149)

# கரும்புலிகள் தமது இறுதிவிருப்பமாய் விடுதலையையும் தலைவரின் எண்ணங்களையும் தாங்கிச் செல்கின்றனர்

## - மூத்த தளபதி பொட்டம்மான் தெரிவிப்பு



கரும்புலி வீரர்கள் தமது இறுதி விருப்பமாய் விடுதலையையும் தேசியத்தலைவர் அவர்களின் எண்ணங்களையும் தாங்கிச் சென்றதைக் கண்டிருக்கின்றோம் அவர்களது விருப்பமான தேச விடுதலையைப் பெற்று தமிழீழ தேசத்தை சுதந்திர பூமியாக உருவாக்குவதே அந்தக் கரும்புலி வீரர்களின் உயிர்க் கொடைக்கு நாம் செலுத்தும் கடனாக அமையும் இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியும் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டம்மான் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கரும்புலிகள் நாளை யொட்டி நேற்றுமுன்தினம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நாம் எல்லோரும் தமிழரென்று தலை நிமிர்ந்து நிற்பதற்காக தம்மைத் தாமே தற்கொடை செய்து கொண்ட கரும்புலி மாவீரர்களின் நினைவு நாள் இன்றாகும்.

பலவீனமான எமது இனத்தின் பலமான ஆயுதங்களாக கரும்புலிகளை உருவாக்கினேன் எனத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட கருத்து நிலைக்கு சான்றாக, இன்று தமிழினம் தமது சொந்தக்காலில் தம் விடுதலையைப் பெற்றுவிடும் உறுதியுடன் நிற்பதற்கு காரணமாக இருக்கும் உயர்ந்த இன வலிமையை உருவாக்கித் தந்த கரும்புலி மாவீரர்களின் நினைவு (12ஆம் பக்கம் பார்க்க)

# கல்முனையில் இனந்தெரியாதோர் தாக்கு

# இரு பொலிஸ் புலனாய்வாளர்கள் பலி!

## கல்முனை நகர்ப் பகுதியில் படையினர் குவிப்பு

*கல்முனைப் பகுதியில் நேற்று இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கித் தாக்குதலில் சிறிலங்கா பொலிஸ் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த இருவர் பலியாகினர் இத்தாக்குதலையடுத்து கல்முனை நகரப்பகுதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

முற்பகல் 11.30 மணியளவில் உந்துருளி ஒன்றில் கல்முனை பொலிஸ் நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்த இவர்கள் மீது அப்பிரதேசத்திற்கு சமீபமாக பதுங்கி காத்திருந்த இனந்தெரியாதோரினாலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் காயமடைந்தசர்ஜன் ரபாஜ்டீன், மற்றும் பி.ஜி.கபிலசிறி என்னும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மிக ஆபத்தான நிலையில் கல் முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.அங்கு பி.ஜி.கபிலசிறி என்பவர் உயிரிழந்தார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக உலங்கு வானூர்தி மூலம் கொழும்பு வைத்தியசாலை நோக்கி கொண்டு செல்லும் வழியில் ரபாஜ்டீன் என்பவர் உயிரிழந்ததாகபிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (32)

## கொக்லண்ட் இன்று திருமலை பயணம்

(கொழும்பு)

இலங்கைப்போர் நிறுத்தக்கண் காணிப்புகுழுத் தலைவர் ஹக்ரப் கொக்லண்ட் இன்று திருகோணமலை சென்று திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் கடற்பகுதி கண்காணிப்பாளர்களை சந்தித்துக் கலந்துரையாட உள்ளதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வட் (12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் ஸ்தம்பித நிலைக்கு சனாதிபதித் தேர்தலே தீர்வாகும்

### - பேரணியில் ரணில் வலியுறுத்து

(கொழும்பு)

சனாதிபதி தேர்தலை நடத்துவதன் மூலம் நாட்டின் தற்போது ஸ்தம்பித நிலையைத் தவிர்க்க முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நடத்திவரும் ஜனபல மேயும பேரணி ஐந்தாம் நாளை கடந்துள்ளது. இதன்படி நேற்றுக் காலை ஹக்கிடுவையில் ஆரம்பித்து பலப்பட்டியில் முடிவடைந்துள்ளது. குறித்த பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றதாக தெரிவிக்கப்பட் (12ஆம் பக்கம் பார்க்க)

## கருவேப்பங்கேணியில் மக்கள் படையினரால் அச்சுறுத்தல்!

மட்டக்களப்பு கருவேப்பங்கேணியில் சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவர் கடந்த 30 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து அப்பகுதியிலுள்ள பொதுமக்களை படையினர் துருவித் துருவி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முச்சக்கர வண்டியில் வைத்தே மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே.இந்தச்சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்களை அடையாளம் காட்ட முடியாதா என சில பொதுமக்களைப் படையினர் வழிமறித்து விசாரணை மேற்கொண்டதுடன்,இரவு நேரத்திலும் இராணுவத்தினரின் நடமாட்டங்கள் அதிகம் (12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கு எதிராக செயற்பட தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் அமைப்பு

(கொழும்பு)

பல அமைப்புக்கள் சேர்ந்து உருவாக்கப்பட்டுள்ள தேசிய அமைப்புக்களின் ஒன்றியமே, எதிர்காலத்தில் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அறிவித்துள்ளது. இந்த ஒன்றியத்தில் பல பொது அமைப்புக்களும், சில முஸ்லிம் அமைப்புக்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இணைந்து கொண்டுள்ளதாகவும் அது அறிவித்துள்ளது. சனாதிபதி சந்திரிகா தலைமையிலான சில அரசாங்கச் சக்திகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டைப் பாதுகாப்பதற்கு அனைத்துத் தேசப்பற்றுள்ள சக்திகளையும் இந்த ஒன்றியத்தின் கீழ் இணையுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை மீது இடைக்கால தடை பிறப்பிக்க முடியாது

### -பிரதம நீதியரசர் நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு மீது இடைக் கால தடையுத்தரவை பிறப்பிக்க முடியாது என சிறிலங்காவின் பிரதம நீதியரசர் நேற்றுத் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஜே.வி.பி யின் 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தமனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு குறித்து நேற்று ஆராயப்பட்டபோது பிரதமநீதியரசர் தலைமையிலான மூவரைக்கொண்ட நீதியரசர்கள் மனுவை விசாரணைக்கு எடுக்க தீர்மானித்தனர்.

இதன்படி எதிர்வரும் 12 ஆம் (12ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகரிலுள்ள பாதுகாப்பு வலயமின்கம்பி வேலியில் சிக்கி கடற்றொழிலாளர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் சிறிலங்காப் படை அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

கடந்த இரண்டாம் திகதி யாழ்.குருநகர் இறங்குதுறைப் பகுதியில் உள்ள இராணுவ முட்கம்பி வேலி (12ஆம் பக்கம் பார்க்க)

## கார் அச்சு உடைந்து விபத்து மருத்துவபீட மாணவன் பலி!

### -இரு மாணவர்கள் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

மோட்டார் கார் விபத்துக்குள்ளானதன் விளைவாக மூவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கெடுத்து வரப்பட்டு அவசரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட நிலையில் ஒருவர் வைத்தியசாலையில் மரணமானார்.

மேற்படி சம்பவம் நேற்று காலை 7.00 மணியளவில் வடகாடு மல்லாவியில் இடம்பெற்றுள் ளது. மல்லாவியிலிருந்து கொழும்பு நோக்கி மூன்று மருத்துவபீட மாணவர்கள் பயணமானபொழுது மோட்டார் காரின் அச்சு உடைந்ததன் காரணத்தினாலேயே மேற்படி சம்பவம் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

கொழும்பில் வைத்து கடந்த சில மாதங்களிற்கு முன்பு சுட்டுக் கொல்லப்பட்ட சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை இடும் அதிகாரி லெப்.கேணல் துவான் நிஷாம் முத்தலிப் கொலை தொடர்பாக ஐந்து பேரை சந்தேகத்தின் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

சேவியர் கடைச்சந்திக்கு அருகாமையிலுள்ள இலக்கம் -158 ஆனந்த நகர் 1/2 ஏக்கர் காணியும் 10ஆம் பண்ணையிலுள்ள 104 இலக்கத்துக்குரிய 2ஏக்கர் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- இல 104, 10ஆம் பண்ணை, கனகபுரம், எஸ். குகன். (6338)

### காணிவிற்பனைக்குண்டு

வள்ளிபுனம் சந்திக்கருகாமையில் தென்னங்கன்று மற்றும் பயன் தரு மரங்களுடன் 2ஏக்கர் காணி விற்பனைக்குண்டு தொடர்புக்கு. வாணி நகைமாடம்,கனகபுரம், கிளிநொச்சி. (6332)

### தவறிவிட்டது.

கிளிநொச்சிக்கும், மாங்குளத்திற்கும் இடையில் சிவராசா பிரபாகரன் என்பவரது அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை, பேஸ் என்பன தவறிவிட்டது. இதனைக கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள் (6333)

### தவறிவிட்டது

கந்தசாமி கோவிலுக்கும், காவல்துறை நடுவப்பணியகத்திற்கும் இடையில் டயறி ஒன்று முக்கிய ஆவணங்களுடன் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள் (6336)

### நிகழ்விடம் மாற்றம்

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினரால் எதிர் வரும் 9ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவிருந்த விஞ்ஞானதினம் அன்றையதினம் குறிப்பிட்டநேரத்தின் பிரகாரம் கிளிநொச்சி மாகவித்தியாலயத்தில் நடைபெறுமென கிளி/வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராசா தெரிவித்துள்ளார். (சோ)

---

கரைச்சி

## புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய

## வருடாந்த மகோற்சவம்

நாகதம்பிரான் ஆலய வருடாந்த மகோற்சவம் 03-07-2005ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி (11) பதினொரு தினங்கள் நடைபெற வுள்ளது. 12.07.2005 செவ்வாய் தேர் உற்சவமும், 13.07.2005 புதன் தீர்த்தோற்சவமும் நடைபெறும் என்பதை நாகதம்பிரான் அடியவர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

ஆலயபரிபாலன சபையினர்

(சி-12310)

---

## கட்டடங்கள் கட்டுவது தொடர்பில் அமெரிக்கப் பேராசிரியர் பயிற்சிப்பட்டறை

06.07.2005 அன்று மு.ப.9.30 மணியளவில் பொருண்மியமதியுரையகத்தில் அமெரிக்காவில் இருந்து வருகை தந்த பேராசிரியர் ராஜ் சித்தாத்தன் அவர்களால் கட்டடங்கள்கட்டும்போது ஏற்படும் வெடிப்புக்கள் தொடர்பான பிரச்சினையும், அதற்கான விளக்கமும் பொறியியலாளர்களிற்கு வழங்கப்பட்டதுடன், கட்டடங்கள் கட்டும்போது கவனிக்கப்படவேண்டிய விடயங்களும் எடுத்துக்கூறப்பட்டது.

இப்பயிற்சிப்பட்டறையின் நிகழ்வுகள் பொருண்மியமதியுரையகத்தில் திரு.முரளிதரன் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. முதல் நிகழ்வாக ஈகச்சுடரினை பேராசிரியர் ராஜ் சித்தாத்தன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தேசியக்கொடியினை திட்டமிடலிற்கும் மேம்பாட்டிற்குமான செயலகத்தைச் சேர்ந்த மதி அவர்கள் ஏற்றி வைத்தார். அடுத்து அகவணக்கம் இடம்பெற்றது. அதனையடுத்து வரவேற்புரையை பொருண்மிய மதியுரையக தலைவரும், பேராசிரியருமான நவரட்ண ராஜா ஆற்றினார். அடுத்து பேராசிரியர் சித்தாத்தன் அவர்களால் மண்ணியல் தொடர்பான கருத்துரை வழங்கப்பட்டது. இதில் ஒரு கட்டடம் கட்டும்போது எப்படியான பிரச்சினை ஏற்படும். அதனை எவ்வாறு தீர்க்கலாம் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அதனையடுத்து பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டோர் மண்ணியல் தொடர்பான. கேள்விகளைக் கேட்டு அதற்கான விடையினைப் பெற்றுக்கொண்டனர். கலந்துரையாடலைத் தொடர்ந்து பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு. சுகுணன் அவர்களது நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றன. (சி-12313)

---

## நீங்காத நினைவில்



### அமரர் செல்லப்பா மகேந்திரன்

(அன்பு வெதுப்பக உரிமையாளர் கிளிநொச்சி)

மண்ணில் 20-08-1951

விண்ணில் 18-06-2004

எங்கள் அன்புத் தெய்வம்
எமைப்பிரிந்து ஆண்டொன்று கடந்தும்
எம்வாழ்வில் ஆறாத் துன்பமையா
எம்மையே நாம் தேற்ற முடியாது
எம்வாழ்வில் ஏங்கித் தவிக்கின்றோம்
எங்களுடன் வாழ்ந்த வாழ்வு
எப்போதும் இனி திரும்பாதையா
என்றாலும் எம்மனதில் உம்நினைவு
என்றும் அழியாதையா.

இல-18
ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

(5946)

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

---



NEERDO

IPEC

## கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (REERDO)

சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (I.L.O) நிதி உதவியுடன்

அறிவியல் நகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடாத்த இருக்கும் தொழிற்பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சிநெறிகள்**

- ◈ தையல் பயிற்சி
- ◈ உணவு பதனிடுதல்
- ◈ மேசன் வேலை
- ◈ தச்சு வேலை
- ◈ நீர் குழாய் இணைப்பு
- ◈ வீட்டு மின்னிணைப்பு

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-
இணைப்பாளர், றீடோ நிறுவனம், கனகபுரம் வீதி,
கிளிநொச்சி. 021-2285999
முடிவுத்திகதி:- 25-07-2005

**பயிற்சியின் அனுகூலங்கள்:**

- ☞ தொழிற்பயிற்சியின்போது இலவசமாக துவிச்சக்கரவண்டி வழங்கப்படும்
- ☞ பயிற்சி முடிவில் தொழில் புரிவதற்கான 6000 ரூபாய் பெறுமதியான உபகரணத் தொகுதி வழங்கப்படும்.
- ☞ பயிற்சிக்காலத்தில் பயிற்சிக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.
- ☞ சுயதொழில் முயற்சி கடன் வசதியைப் பெறுவது சம்பந்தமாக மேலதிக விளக்கமும், ஆலோசனையும்
- ☞ அபிவிருத்தித் திட்டங்களில் வேலை வாய்ப்புக்காக சிபாரிசு செய்தல்.
- ☞ அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

**பயிற்சியின் விபரங்கள்.**

- ✦ விசேடதேவைக்கு உட்பட்டோர்
- ✦ பாடசாலைக் கல்வியை தொடர முடியாத இளைஞர், யுவதிகள்.
- ✦ சுனாமியால் பாதிக்கப்பட்டோர்
- ✦ வயதெல்லை 14 வயது தொடக்கம் 25வயதிற்கு உட்பட்டோர்.

குறிப்பு:- கல்வி தொழிற்கல்வி அபிவிருத்தி நிலையம் என்ற முகவரிக்கு நேரடியாகவும் கையளிக்கலாம் நிர்வாகம்.

அறிவியல்நகர் பாரதிபுரம்.

(சி-12312)



அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சும் டென்மார்க் பிரதமர் (இடது) அண்டர்ஸ் போரஸ் மகனை அவரது கோடைகால வாசஸ் தலத்தில் சந்தித்து உரையாடுகிறார்.

# ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைவிரிவாக்கம்; ஆபிரிக்க யூனியனுடன் இணைகிறது ஜி-4 நாடுகள்

(டோக்கியோ)

**ஐ.நா.பாதுகாப்பு சபையில் விரிவாக்கப் பிரச்சினையில், ஆபிரிக்க யூனியன் நாடுகளுடன் ஜி-நான்கு நாடுகளும் இணைந்து செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளன.**

ஐ.நா. பாதுகாப்பு சபையில் விரிவுபடுத்தும் படி, அதில் தங்களுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி தரும்படி ஜி-நான்கு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. பிரேசில், ஜேர்மனி, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இதில் உள்ளன. பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம்பிடிக்க, உலகளவில் இந்தியா ஆதரவு திரட்டி வருகிறது. இவ்விடயத்தில் இந்த நான்கு நாடுகளும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

டோக்கியோவில் ஜப்பான் வெளியுறவு அமைச்சர்நொபுடகா மச்சிமுரா, இது தொடர்பாக நேற்று கூறுகையில், "பாதுகாப்பு சபையில் விரிவுபடுத்தும் விவகாரத்தில், ஆபிரிக்க யூனியன் நாடுகளுடன் ஜி-நான்கு நாடுகள் இணைந்து செயற்படுகின்றன. பாதுகாப்பு சபையில் விரிவாக்கத்திட்டத்தை இம்மாதம் இறுதியில் ஐ.நா., பொதுக்கூட்டத்தில் சமர்பிக்கும் முன், ஆபிரிக்க யூனியன் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் ஆலோசிக்கப்படும். ஆபிரிக்க யூனியனில் இடம் பெற்றுள்ள 53 நாடுகளும் தங்கள் முடிவை எடுத்த பின், ஜி-நான்கு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் தொலைபேசியில் பேசுவேன்," என்றார்.



பஸ்ராவுக்குத் தெற்கே 20 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அபு அல்கசிப் நகரில் ஈராக்கிய பொலிசாரால் கைது செய்யப்பட்ட பயங்கரவாதக் குழுத்தலைவரைப் பொலிசார் காருக்குள் தள்ளி விடுகின்றனர்.

## ஈராக்கின் பக்ரைன் தூதுவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

(பாக்தாத்)

ஈராக் நாட்டுக்கான பக்ரைன் தூதர் இஷான் அல் அன்சாரி துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர். இவர் பாக்தாத்தில் உள்ள அலுவலகத்திற்கு செல்வதற்காக காரில் சென்றபோது தீவிரவாதிகள் நான்கு பேர் அவரது காரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இதில் அவர் காயம் அடைந்தார். உடனே அவர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆறு சீன விமானிகளுக்கு பயிற்சி

(பீஜிங்)

விண்வெளி வீரர் ஒருவரை ஷென்ஷப் என்ற விண்கலம் மூலம் வருகிற செப்ரெம்பர் மாதம் விண்ணுக்குச் செலுத்த சீனா திட்டமிட்டுள்ளது. இதற்காக ஆறு விமானிகள் தேர்வு செய்யப் பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த 2003 ஆம் ஆண்டு சீன விண்வெளி வீரர் யாங்லிவெய்ஷென்ஷப் விண் கலம் மூலம் 14 முறை பூமியைச் சுற்றிவந்தார்.



நேற்று முன்தினம் பாக்தாத்திலுள்ள ஈரானிய தூதரகத்திற்கு அண்மையில் அமெரிக்கத் தொடரணி மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பபட்டதையடுத்து அப்பகுதி அமெரிக்கப்படைகளால் சுத்திகரிக்கப்பட்ட நிலையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள படையினர் ஒருவர்.

## கத்தோலிக்க மதகுரு ஒருவர் சீனாவில் கைதுசெய்யப்பட்டார்

(பீஜிங்)

சீனாவில் தலைமறைவாக இருந்து வந்த கத்தோலிக்க அருட்தந்தை ஒருவர் கைதுசெய்யப்பட்டு இரகசிய இடத்துக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

சீனாவில் அரசு அங்கீகரித்த கிறிஸ்தவ தேவாலயங்கள் மட்டுமே செயற்பட முடியும். வத்திக்கானையும், போப் ஆண்ட வரையும் சீனா அங்கீரிக்க வில்லை. இதனால் கத்தோலிக்க கிறிஸ்தவதேவாலயங்கள் அங்கு இரகசியமாக இயங்கி வருகின்றன. ஹெனான் மாநிலத்தில் தலைமறைவாகச் செயற் பட்டு வந்த ரோமன் கத்தோலிக்க பிஷப் ஜியா ஜி கியுயோ கைது செய்யப்பட்டார். 70 வயதான அவர் எந்தக்குற்றத்துக்காக கைது செய்யப்பட்டார் என்பது தெரியவில்லை. கைது செய்யப்பட்டதும் அவர் இரகசிய இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டார். இவர் ஆறு முறை கைதாகி 20 ஆண்டுகள் சிறையில் இருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் அரசு அங்கீகரித்த கிறிஸ்தவ மதத்தில் ஐந்து கோடி பேரும், கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தில் எட்டுக் கோடி பேரும் இருப்பதாக வத்திக்கான் கூறியுள்ளது.



நேற்று முன்தினம் பாக்தாத்திலுள்ள ஈரானிய தூதரகத்திற்கு அண்மையில் அமெரிக்கத் தொடரணி மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பபட்டதையடுத்து அப்பகுதி அமெரிக்கப் படைகளால் சுத்திகரிக்கப்பட்ட நிலையில் ஈரானியப் பெண்கள் தூதர கத்தில் விசாபெறக் காத்திருப்பதையும், வெளிநாட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தக்காரர் சம்பவம் இடம்பெற்ற இடத்தை அவதானிப்பதையும் காணலாம்.

# பின்லேடன் பாகிஸ்தானில் இல்லை ஆப்கானிலேயே மறைந்திருக்கிறார்

**-பாக்.உள்துறை அமைச்சர்**



(இஸ்லாமபாத்)

பின்லேடன் ஆப்கானிஸ் தானின் தெற்குப்பகுதியில் பதுங்கி இருக்கலாம்" என்று பாகிஸ்தான் அமைச்சர் அப் தாப் அகமது கான் கூறு கிறார்.

ஆப்கானிஸ்தானில் அரசு விருந்தினராகத் தங்கி யிருந்த பின்லேடன் ஆப் கான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதும் தலைமறைவானார். அவரது வலதுகரமாக விளங்கும் அய்மன் அல்ஜவாஹிரி தலிபான் இயக்கத் தலைவர் முல்லா முகமது ஓமர் ஆகியோரும் தலைமறை வானார்கள்.

அவர்கள் எங்கே ஒழிந்து இருக்கிறார்கள் என்பது தெரியாமலுள்ளது. பாகிஸ்தான், ஆப்கான் எல்லை அருகே உள்ள மலைப்பகுதியில் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இல்லை என்று ஆப்கான் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர். அவர் பாகிஸ்தானில்தான் இருக்கிறார் எனத் தெரிவித்தனர்.

ஆனால் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அப்தாப் அகமது கான் பாகிஸ்தானில் பதுங்கியிருக்க வாய்ப்பே இல்லை. ஆப்கானிஸ்தானின் தெற்குப்பகுதியில் தான் பதுங்கி இருக்க வேண்டும் என்று கூறினார். இது தொடர்காக அவர் மேலும் கூறியதாவது.;

கடந்த சில வாரங்களாக ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில், தீவிரவாதத் தாக்குதல் அதிகரித்துள்ளது. ஆப்கான் அரசின் கட்டுப்பாட்டில் இந்தப் பகுதி இல்லை. எனவே பின்லேடனும் முல்லா முகமது ஓமரும் இங்கு தான் தங்கியிருக்கவேண்டும். இவ்வாறு அமைச்சர் அப்தாப் அகமதுகான் கூறினார். 2001 ஆம் ஆண்டு தலிபான் ஆட்சி அகற்றப்படும் வரை தெற்கு ஆப்கானிஸ்தான் தலிபான் இயக்கத்தொட்டிலாக இருந்தது எனவும் குறிப்பிட்டார்.

## ஆறுசதவீத மாணவர்கள் பாடசாலைக்கு துப்பாக்கியுடன் செல்வதாக கணிப்பு

(லண்டன்)

இங்கிலாந்தில் துப்பாக்கியுடன் பாடசாலைக்கு ஆறு சதவீத மாணவர்கள் வருவதாக ஒரு கருத்துக்கணிப்பு மூலம் தெரியவந்துள்ளது. பத்தில் ஒரு மாணவர் கத்தி வைததிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் 11 முதல் 15 வயதுக்கு உட்பட்ட 11 ஆயிரத்து 400 மாணவர்களிடம் நடத்திய கருத்துக்கணிப்பு மூலம் இது தெரியவந்துள்ளது.

## சீனாவில் இரண்டு கோடிமக்கள் வறுமையில் வாடுவதாக தகவல்

(பீஜிங்)

உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதார நாடாக சீனா இருந்து வருகின்ற போதிலும் கிராமப் புறங்களில் வசிக்கும் இரண்டு கோடியே 60 இலட்சம் சீனர்கள் வறுமையில் வாழ்கிறார்கள். அவர்களின் ஆண்டு வருமானம் நாலாயிரம் ரூபாய் மட்டுமே என்று சீன அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார்.

உழவர்களில் ஐந்து பேர் மிகக் குறைந்த வருமானம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார். ஏழை பணக்காரர்கள் இடையே ஏற்பட்டுள்ள இடைவெளியும், ஊழலும் சீனாவில் அடிக்கடி கலவரம் ஏற்படக் காரணமாக உள்ளன. சீனாவின் 130 கோடி மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள்.

## சிரியாவில் 2 பேர் பலி

(டமாஸ்கஸ்)

சிரியாவில் கடந்ததிங்களன்று படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நடந்த மோதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாயினர். நான்கு அதிகாரிகள் படுகாயமடைந்தனர். சதாம் ஹூசைனின் பாதுகாவலர்களாக செயற்பட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈராக் மீது அமெரிக்க கூட்டணிப் படைகள் தாக்குதல் நடத்தி சதாம் ஆட்சியை வீழ்த்திய பின்னர் சதாம் ஆதரவு வீரர்கள் சிலர் அண்டை நாடான சிரியாவில் தஞ்சம் புகுந்தனர். சிரியாவிலிருந்தபடி தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் இந்த நபர்களுக்கும், சிரியா பாதுகாப்பு படையினருக்கும் இடையே தலைநகர் டமாஸ்கசில் நேற்று முன்தினம் சண்டை நடந்தது.

## அமெரிக்க சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் சீக்கியர்கள் வண்ணமிகு ஊர்வலம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில், சீக்கியர்கள் முதன் முறையாக வண்ணமிகு ஊர்வலம் நடத்தினர். அமெரிக்காவின் சுதந்திரதினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. அமெரிக்கர்கள் மட்டுமன்றி, நாட்டில் குடியேறியுள்ள இதர கண்டங்களைச் சேர்ந்த மக்களும் உற்சாகமாக இந்தக் கொண்டாட்டத்தில் பங்கேற்றனர். அமெரிக்காவில் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஏராளமானசீக்கியர்கள் வசித்து வருகின்றனர்.

நியூயோர்க் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட சம்பவத்திற்குப் பின், அமெரிக்காவில் கடும் பாதுகாப்பு கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. அந்த நடவடிக்கைகளால் சீக்கியர்களும் பாதிக்கப்பட்டனர். சீக்கியர்களின் மனம் புண்பட்டது. அமெரிக்கர்களின் மனதில் தங்களைப் பற்றிய நல்லெண்ணத்தை வளர்க்கும் வகையில், அமெரிக்காவின் சுதந்திர தின கொண்டாட்டத்தில் சீக்கிய ஆண்களும், பெண்களும் நேற்று முன்தினம் உற்சாகமாகக்கலந்து கொண்டனர்.

சீக்கியர்களுக்கே உரிய டர்பனும். பாரம்பரிய உடைகளையும் அணிந்து



வோஷிங்டனில் வண்ணமிகு ஊர்வலம் நடத்தினர். சீக்கியர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுக்களையும் செய்து காட்டினர். ஏராளமான சீக்கியர்கள், தங்கள் குடும்பங்களுடன் இதில் பங்கேற்றனர். அமெரிக்காவின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில், சீக்கியர்கள் இந்தளவு ஆர்வத்துடன் பங்கேற்றதும், ஊர்வலம் நடத்தியதும் இதுவே முதல் முறை.

# தமிழீழ அரசின் அடித்தளமாக விளங்குவது தமிழீழ வைப்பகம்

## தூயவன் அரசறிவியற் கல்லூரி விரிவுரையாளர்

(கிளிநொச்சி)

**தமிழீழ அரசின் அடித்தளமாக விளங்குவது தமிழீழ வைப்பகம் என தூயவன் அரசறிவியற் கல்லூரியின் விரிவுரையாளர் அரசண்ணா தெரிவித்தார். நேற்று முன்தினம் பரந்தனில் இடம்பெற்ற தமிழீழ வைப்பகத்தின் 12ஆவது கிளை திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் தமது உயிர்களை ஆகுதியாக்கிய கரும்புலி மாவீரர்களை நினைவு கூரும் இந்நாளில் தமிழீழ வைப்பகத்தின் கிளையொன்று பரந்தனில் திறந்து வைக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது என்று தெரிவித்தார். கடந்த காலப்போர் நெருக்கடிகளின் போது அரச வங்கிகள் தமிழ் மக்களிடம் இருந்து திரட்டும் நிதியினை தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கும் போது தமிழ் மக்களின் பணமே தமிழ் மக்களுக்கெதிராக பயன்படுத்தப்பட்டதை நாம் அறிவோம். இந்நிலையில் எமது விடுதலையமைப்பு தமிழீழ வைப்பகத்தினை ஆரம்பித்து தமிழ் மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. தமிழ் மக்களுடையதும், தமிழீழ அரசினதும் அடித்தளமாக தமிழீழ வைப்பகம் விளங்கி வருகின்றது. அடுத்த ஆண்டில் தமிழீழ வைப்பகம் 13 கிளைகளை ஒரே ஆண்டில் திறக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அதனுடைய செயற்பாடுகள் மக்கள் நலன் சார்ந்தவையாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கிளிநொச்சி பிரதம தபாலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் பகல் கார் உந்துருளியுடன் மோதியதில் உந்துருளியில் பயணித்தவர் காயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (படம்:சோதி)

# தமிழீழ வைப்பகத்தின் 12 ஆவது கிளை நேற்று முன்தினம் பரந்தனில் திறந்து வைப்பு

(நமதுநிருபர்)

தமிழீழ வைப்பகத்தின் 12 ஆவது கிளை நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் பரந்தன் நகரில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ வைப்பகத்தின் நடுவப்பணியக ஆளுகைப் பகுதி மேலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்



பொதுச்சுடரினை இலங்கை வங்கி முகாமையாளர் கோபாலச்சந்திரன், சேரன் வாணிப பொறுப்பாளர் இளம்பரிதி, இளவேனில் வாணிபப் பொறுப்பாளர் யாழவன், கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச தலைவர் ம.நடராசா, கிளி.மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின் தலைவர் சு.மனோகரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை காவல் துறைதுணைப்பொறுப்பாளர் மாதவனும், தமிழீழ வைப்பக கொடியினை தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் வீரத்தேவனும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து கரும்புலிகளின் பொதுப்படத்திற்கு சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தமிழீழ வைப்பகப் நடுவப்பணியக ஆளுகைப் பகுதி மேலாளரின் தலைமையுரையினைத் தொடர்ந்து பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளர் க.கந்தசாமி, கண்டாவளை பிரதேச செயலர் சத்தியசீலன் கிளி.மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின் தலைவர் சு.மனோகரன், நிதித்துறை வணிக ஒன்றியத்தலைவர் சொ.வெற்றியரசன், கிளி.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கலைவாணன், காவல்துறை துணைப்பொறுப்பாளர் மாதவன், அரசியல்துறையைச் சேர்ந்த அரசண்ணா, ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து வைப்பகத்தின் பெயர்ப்பலகையினை கண்டாவளை பிரதேச செயலர் சத்தியசீலன் திரைநீக்கம் செய்துவைக்க, தமிழீழ வைப்பகத்தினை காவல் துறைதுணைப்பொறுப்பாளர் மாதவன் நாடாவினை வெட்டித்திறந்து வைத்ததுடன், வைப்பகப் பணியினையும் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து வழமைதாரர்கள் தமது வைப்புக்களை செய்து கொண்டனர். (செ)



படங்கள்-செல்வா

# வெளிச்சம் இதழ் வெளிவந்துவிட்டது

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' சஞ்சிகையின் தொண்ணூற்றியோராவது (சித்திரை-ஆனி 2005) இதழ் வெளிவந்திருக்கிறது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, புதுவை இரத்தினதுரை, த.ஜெயசீலன், வேல்.லவன், வி.குணபாலா, வேலணையூர் சுரேஷ் க.சந்திரா, வேரற்கேணியன், துவாரகன் ஆகியோரின் கவிதைகளும், முத்து இராதாக்கிருஷ்ணன்,செ.யோகநாதன், தாட்சாயினி ஆகியோரின் சிறுகதைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

இவற்றுடன் பேராசிரியர் கா.சிவத்தம்பி, தி.திருக்குமரன், தூயவன்,யதீந்திரா, அ.அன்ரனி ஆகியோரது கட்டுரைகளும், ஞானரதனின் தொடர்கட்டுரையும், கவிஞர் சு. வில்வரெத்தினத்தின் நேர்காணலும், மாமனிதர் டி.சிவராம், நாட்டுப் பற்றாளர் செம்பியன் செல்வன், பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி), சோகசோபித சொர்னக் கவிக்குயில் இரத்தினம் ஆகியோருக்கான அஞ்சலிகள், குறிப்புகள், புதிய வரவுகள் இன்னும் பலவும் தாங்கி இந்த இதழ் வெளி வந்துள்ளது.



நாச்சிக்குடா கடற்கரைக்கு அண்மையில் அமைந்துள்ள பொதுச்சந்தை கொட்டகை நீண்ட நாட்களாக புனரமைக்கப்படாத நிலையில் மோசமாக சேதமடைந்துள்ளது. இதனால் வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருக்கிறார்கள். சேதமடைந்த பொதுச்சந்தையின் தற்காலிக கொட்டகையைப் படத்தில் காணலாம். (படம்:அ.லோகீசன்)

### புதிய நிர்வாகிகள் தெரிவு

முல்லை.பிரதேச வாடகை சிற்றூர்தி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு வண்ணாங்குள இடைத் தங்கல் முகாமில் இடம் பெற்றுள்ளது.

முல்லை.பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் தலைமையில் இடம் பெற்ற தெரிவில், புதிய நிர்வாகத்தலைவராக இ.ஜேம்ஸ், செயலாளராக விக்கினேஸ்வரன், பொருளாளராக சிங்கப்பூர், உப தலைவராக நவரத்தினம், நிர்வாக உறுப்பினராக மதிபாலன் அருள்தாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். சிற்றூர்திகளின் சேவை தொடர்பாக கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் மா.ரங்கன், முல்லை.பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் முல்லை. பிரதேச சிற்றூர்திகளின் உரிமையாளர்கள் [illegible] பலர்கலந்து கொண்டமை [illegible]த்தக்கது. (20)

# கிளிநொச்சி நகர திண்மக்கழிவகற்றலுக்கான புதிய நடைமுறை இவ்வாரம் முதல் அமுல்

(கிளிநொச்சி)

முறிகண்டியிலிருந்து பரந்தன் வரையான ஏ-9 வீதியோர வியாபார நிலையங்களில் இவ்வாரம் முதல் உக்கக் கூடிய திண்மக் கழிவுகளை கறுப்பு நிற பொலித்தீன் பைகளில் சேகரித்து அதனை கரைச்சிப் பிரதேச சபையினால் தினமும் எடுத்துச் செல்லப்படுவதற்கு ஏதுவாக நடவடிக்கைகள் தமிழீழ சுகாதார சேவைகளினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் சுற்றாடல் சுகாதாரத்திற்கு மாசு ஏற்படாத வண்ணம் இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் புதைக்கப்படும். இக்கழிவுகளைப் பசளையாக்குவதற்கு நவீன தொழில் நுட்ப முறைகள் ஆராயப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் வருமாறு;

திண்மக்கழிவுகள் அகற்றுவதற்கு நெகிழக்கூடிய பொலித்தீன் பைகள் முறையே உக்கும் தன்மையுடைய கழிவுகளுக்கு கறுப்பு நிற பொலித்தீன் பைகளும், உக்காத தன்மையுடைய கழிவுகளுக்கு நீல நிறப் பொலித்தீன் பைகளும, தொறறை ஏற்படுத்தக்கூடிய கழிவுகளுக்கு மஞ்சள் நிற பொலித்தீன் பைகளும் பயன்படுத்தப்படும்.

தங்கள் நிலையத்தின் திண்மக் கழிவின் தன்மை, திண்மக்கழிவு அளவிற்கேற்ப நெகிழக்கூடிய பொலித்தீன் பைகளை ஐந்து ரூபா செலுத்தி பிரதேச சபை அலுவலகத்தில் அல்லது வர்த்தக சங்கத்திடம் பெற்றுக்கொள்ள முடியும்.

நெகிழ் தன்மை திண்மக்கழிவுகள் அகற்றும் பொலித்தீன் பைகள் நடைமுறைப்படுத்தப்படும் நாளிலிருந்து சகல வர்த்தக உரிமையாளர்களும் ஒரே நடைமுறையைப் பின்பற்றி திண்மக்கழிவுகளை தாங்களே சேகரித்து வாய்ப்பகுதி கட்டப்பட்ட நிலையில் தினமும் காலை 9.00 மணிக்குள் தமது நிலையத்தின் முன்வைக்க வேண்டும்.

வியாபார நிலையங்களில் நெகிழ்தன்மை பொலித்தீனில் நிரப்பப்பட்ட கழிவுகள் பிரதேசசபை தொழிலாளர்கள் இறுதியகற்றல் வாகனத்திற்கு எடுப்பதற்கேற்ற வகையில் அடையாளப்படுத்தி வைக்கப்படுதல் வேண்டும். இந் நடைமுறை நடைமுறைப்படுத்திய பின்னர் திண்மக்கழிவுகளை நிலையத்தின் முன்பகுதி, பின்பகுதிகளில் குவித்தல், நீரோட்டக் கால்வாய்களில் சேர்த்தல், நிலைய முன்பகுதி பின்பகுதிகளில் வைத்து எரித்தல் என்பன மேற்கொள்ளல் தவிர்க்கப் பட வேண்டும்.

திண்மக்கழிவகற்றல் முறைமை நடைமுறைப்படுத்தும் பிரதேசசபை, சுகாதார உத்தியோகத்தர்கள், வர்த்தகர் சங்கம் ஆகியோருக்கு ஒத்துழைப்பை வழங்கி எமக்கே சேவை செய்கின்றார்கள் என்ற உணர்வுடன் ஒத்துழைத்தல் வேண்டும்.

திண்மக்கழிவகற்றல் முறைமை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள், சிரமங்கள் ஏற்படின் தமிழீழ சுகாதார சேவைகள், பிரதேசசபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் தொடர்பு கொண்டு தெளிவைப் பெற்று செயற்படுத்துங்கள்.

மேற்படி நடைமுறைகள் மீறப்பட்டு திண்மக் கழிவுகள் நகர சுற்றாடல் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தத்தக்க வகையில் செயற்படும் வியாபார நிலையங்களிற்கு தண்டப் பணமும், அதனுடன் இணைந்த சட்ட நடவடிக்கைக்கும் முறைப்படுத்தப் படும்.

# தென்மராட்சி கச்சாய் கடற்பரப்பில் கடற்படையினர் தீவிர சண்டைப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

**யாழ்.தென்மராட்சியிலுள்ள கச்சாய் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் சண்டைப்பயிற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.**

இரவு அதிகாலை மற்றும் நண்பகல் வேளைகளில் அண்மைக் காலமாக சண்டைப்பயிற்சிகளில் ஈடுபட்டுவரும் சிறிலங்காக் கடற்படையினர் சரமாரியான சூட்டுப்பயிற்சிகளையும், எறிகணைப்பயிற்சிகளையும் நடத்திவருகின்றனர்.

இதனால் கச்சாய் கடற்பரப்பில் சென்று கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு அப்பகுதி கடற்றொழிலாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இவ்வாறான படையினரது செயற்பாடுகளால் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

படையினரின் இந்த நடவடிக்கைகள் குறித்து கடற்றொழிலாளர்கள் படையினர் மற்றும் அரச அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

படையினரின் இந்நடவடிக்கையால் தொழிலுக்குச் செல்வதில் கடற்றொழிலாளர்கள் அச்சம் கொண்டுள்ளதால் தொழில் நடவடிக்கைகளைக் கைவிடும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

படையினரின் இந்நடவடிக்கைகளைத் தடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கடற்றொழிலாளர் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

# "ஜோசியக்காரர்" களிடம் எச்சரிக்கையாக இருக்கவும்

யாழ் நகரப் பகுதியில் நடமாடும் நடை பாதை ஜோசியக்காரர்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் வீதியோரமாக இருந்தவாறு ஜோசியம்கூறும் ஜோசியக்காரர்கள் சில் வசீகரமான வார்த்தைகளை கூறி பொதுமக்களை ஜோசியம் பார்க்க அழைக்கின்றனர்.

இவ்வாறு பொதுமக்களை ஏமாற்றி அவர்கள் வசமுள்ள பணத்தையும் பிடுங்கிக் கொள்வதுடன் அவர்கள் வைத்திருக்கும் நகை, பணம் போன்றவற்றின் விபரங்களை அறிந்து அவர்களைப் பின் தொடர்ந்து சென்று வழிப்பறியிலும் ஈடுபடுகின்றனர் . இவ்வாறான பல சம்பவங்கள் யாழ். நகரிலும் அதை அண்டிய பகுதிகளிலும் அண்மைக்காலமாக இடம் பெற்று வருகின்றமையை காரணம் காட்டியே பொலிஸார் பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு எச்சரித்துள்ளனர். (33)

# ஒப்பந்தக்காரர் இழுத்தடிப்பு; மின்விநியோகம் தாமதம்

(புங்குடுதீவு)

ஒப்பந்தக்காரர்களது இழுத்தடிப்புக்களால்-யாழ் புங்குடு தீவுப்பகுதிக்கான மின்சார விநியோகம் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மின்சார சபையினர் தெரிவிக்கின்றனர்.

தீவகம் -புங்குடுதீவுக்கான மின்சார விநியோக நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையினரால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒன்றிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த தனியார் ஒப்பந்த நிறுவனத்தினர் தமக்குள்ள வளப்பற்றாக் குறைகளைக் காரணம் காட்டி புங்குடுதீவு பிரதேசத்திற்கான மின் இணைப்பு வேலைகளை இழுத்தடிப்புச் செய்து வருகின்றனர்.

இதனால் புங்குடுதீவிலிருந்து மின்சார விநியோகத்திற்காக விண்ணப்பித்த நூற்றுக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின தீவக பணிமனையின் அதிகாரிகள் கூறினர். (33)

# யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் போக்குவரத்து நெரிசல்; விபத்து அதிகரிப்பு

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் அதிகரித்துள்ள வாகனப் போக்குவரத்து நெரிசல்கள் காரணமாக இவ்வீதியில் நாளாந்தம் விபத்துக்கள் அதிகரித்து வருகிறது. யாழ் கண்டி வீதியில் உள்ள செம்மணி பாலத்தின் திருத்த வேலைகள் தற்பொழுது இடம் பெற்று வருவதனால் பருத்தித்துறை வீதியூடாகவே தென்மாரட்சியூடான சகல வாகன போக்குவரத்துக்களும் இடம் பெறுகின்றன.

அத்துடன் வடமராட்சி பகுதிக்கான சகல வாகனப்போக்குவரத்துக்களும் இவ்வீதிகளூடாகவே இடம் பெறுகின்றன.

இந்நிலையில் இவ்வீதியூடான வாகனப் போக்குவரத்து நெருக்கடி மிகவும் அதிகரிப்பதால் இவ்வீதியில் நாளாந்தம் வாகனவிபத்துக்கள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன.

எனினும் இவ்வீதியில் நிகழும் விபத்துக்களையும் வாகன நெரிசல்களையும் கட்டுப்படுத்த சிறிலங்கா பொலிஸாரின் வீதிக்கண்காணிப்பு பிரிவினர் தகுந்த நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது.(33)

# குடாநாட்டில் உள்ளூராட்சி சபைக்கு நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்படும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் சொந்தக் கட்டடங்களின்றி தற்காலிக கட்டடங்களில் இயங்கிவருகின்ற உள்ளூராட்சி சபைகளுக்கென நிரந்தரக் கட்டடங்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையா தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் இருக்கின்ற 10 இற்கும் அதிகமான பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகள் சொந்தக் கட்டடம் இன்றி தற்காலிக கட்டடங்களிலிலேயே இயங்கி வருகின்றன.

இவ்வாறான தற்காலிகக் கட்டடங்களில் அதிகமானவை தனியாரது வீடுகளாகவே இருக்கின்றமையால் இவற்றில் பிரதேச சபை அல்லது நகரசபைக் கட்டடத்துக்குரிய அடிப்படைவசதிகள, இடவசதிகள் என்பன இல்லாதுள்ளன.

இதனால் உள்ளூராட்சிச் சபைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டமையைக் கவனத்தில் கொண்டே இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் புதியகட்டடங்களை நிறுவுவதற்குப் பொருத்தமான காணித் தெரிவுகள் இடம் பெற்று வருவதாகவும் இராசையா மேலும்கூறினார். (33)

# மல்லாகத்தில் விபத்து; இரண்டுபேர் படுகாயம்

(தெல்லிப்பளை)

முச்சக்கர வண்டி ஒன்றை முந்திச்சென்ற ஹைஏஸ் வாகனம் திடீரென நிறுத்தப்பட்டதால் அவ்வாகனத்தில் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் மல்லாகம் சோடாக்கம்பனி மேற்கு ஒழுங்கைக்கு முன்பாக இவ் விபத்து இடம்பெற்றது. முச்சக்கரவண்டியில் வீட்டு ஜன்னல்களுக்கு வேண்டிய கண்ணாடிகளை ஏற்றிக்கொண்டு வந்தவரான அளவெட்டியைச் சேர்ந்த கர்ணன் என்பவர் கையில் பலத்த கண்ணாடி வெட்டுக் காயங்களுக்குள்ளாகி தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேநேரம் முச்சக்கரவண்டி சாரதியான அளவெட்டி மேற்கைச் சேர்ந்த நந்தகுமார் என்பவரும் கைகளில் கண்ணாடியினால் வெடடுப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். (41)

# கட்டுப்படுத்த முன்வருவார்களா?

(மருதனார் மடம்)

யாழ். மருதனார் மடம் பகுதியில் உள்ள விவசாயக் காணிகளில் பாத்தீனியம் விஷச்செடியின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.

இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இச்செடியின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த எவரும் முன்வரவில்லை என விவசாயிகளால் விசனம்தெரிவிக்கப்படுகின்றது. (33)

# வைத்தியசாலைகளில் புற்றுநோய் சிகிச்சை விபரம்

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலைகளில் புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமார்னின் சிகிச்சை சேவை விபரம் இம்மாதம் முதல் கீழ்வரும் ஒழுங்கில் நடைபெறுமென யாழ்.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை வாராந்தம் பிரதி திங்கள், வெள்ளி, ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை மாதாந்தம் முதலாவது புதன்கிழமை, மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரி மாதாந்தம் இரண்டாவது புதன்கிழமை, மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி மாதாந்தம் நான்காவது புதன்கிழமை என்ற ஒழுங்கில் சிகிச்சைகள் நடைபெறும்.

# முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து குடாநாட்டில் ஆராய்வு

(யாழ்ப்பாணம் )

யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கான கூட்டம் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த மூன்றாம் திகதி பி.ப 5.00 மணியளவில் இடம்பெற்றது.

மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி சுபியான் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் பெருமளவு முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல்துறையின் ஊடக இணைப்பாளர் இமையவனும்,யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசனும் கலந்து கொண்டனர்.

மீளக்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களது பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கும்,தீர்வுகள் கண்டு நடைமுறைப்படுத்துவதற்குமான குழுத் தெரிவு செய்யப்பட்டது. இக்குழுவில் வக்பு சபையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிவாசல்களின் நிர்வாகத்தில் இருந்தும்,முஸ்லிம் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் இருந்தும் பிரதிநிதிகளும், ஜமீயத் உலாமாசபை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கி.சிவநேசன் திருமதி.பத்மினி சிதம்பரநாதன், சு.சிவாஜிலிங்கம் ஆகியோருடன் யாழ் மாவட்ட அரசியல் துறைசார்பில் இரு பிரதிநிதிகளுமாக மொத்தம் 27 பேர் இடம்பெறுகின்றனர்.

# உளவள ஆசிரியர் அணி பயிற்சியைப் பூர்த்திசெய்தது

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உளவளப்பாதிப்பிற்குள்ளான சிறார்களிற்கான கல்வியறிவை ஊட்டு முகமாக, நடாத்தப்பட்ட உளவளத்துறை கற்றல் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்த நான்காவதுஅணி ஆசிரியர்கள் தமது கல்வியை முடித்துவெளியேறி யுள்ளனர்.

அவர்களிற்கான பயிற்சிச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை யாழ். நாவலர் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது. இலங்கை கல்வித்திணைக் களத்துடன் இணைந்து ஜேர்மனிய தொழில்நுட்ப அமைப்பான ஜீரீஇசட் இத்தொடர் பயிற்சிகளை நடாத்தி வருகின்றது. (27)

# கைதடியில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தால்கைதடியில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

கைதடி நகரத்தில் பிரதானசாலைக்கு 'அருகில் நிறுவப்பட்டு வரும் இதன் கட்டடப்பணிகள் 80 சதவீத பூர்த்தி அடைந்துவிட்டன.

இந்த எரிபொருள் விநியோகத்திற்கான உரிமம் முன்னரே வழஙகப்பட்டும் கூட தற்பொழுதே இதன் பணிகள் நிறைவடைந்து வருவது குறிப் பிடத்தக்கது. (28)

# கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு புலம் பெயர்ந்த மக்கள் உதவி

(தென்மராட்சி)

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு உள்ளூர் மாணவர்களாலும புலமபெயர்ந்த இப்பிரதேச மக்களாலும் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்காகவும், கட்டடங்கள் அமைக்கவும் உள்ளூர் பழைய மாணவர்களாலும், புலம் பெயர்ந்து லண்டனில் வசிக்கும் இப்பிரதேச மக்களாலும் ஐந்து இலட்சம் ரூபா வரையான உதவிகள் கிடைத்திருப்பதாக பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது. இத்தகைய உதவிகளைச் செய்த உள்ளங்களை இதனால் நன்மை அடையும் மாணவர்கள் நன்றியுடன் நினைவில் கொள்வார்கள் என்றும் பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார். (28)

# வீடுதிருத்தும் பணியை முடித்துதர கோரிக்கை

நாவற்குழி வீட்டுத்திட்டத்தில் நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் நடைபெற்று வரும் ஒன்பது இலட்சம் ரூபா செலவிலான வீதி திருத்தும் பணியும், சனசமூகநிலைய கட்டடப்பணியையும் உடனடியாக முடித்துத் தரும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட சாவகச்சேரி பிரதேச சபை இதற்கு நடவடிக்கைஎடுக்க வேணடும் எனவும் இடைநிறுத்தப்பட்டுள்ள இப்பணிகளை உடனடியாக முடித்து தர வேண்டும் எனவும் நாவற்குழி வீட்டுத்திட்ட அபிவிருத்திகுழு வேண்டுகோள்விடுத்துள்ளது. (28)

# இலங்கையின் அரசியல் வரலாற்றில் யூலை மாதம்

யூலை மாதத்திற்கு சிங்களத்தில் மறு பெயர் ஒன்று உண்டு. அதற்கு இறந்த யூலை மாதம் எனக் கூறுவார்கள். எல்லாக்கலவரங்களும் இந்த யூலை மாதத்தில் தான் இலங்கையில் நடந்தேறியுள்ளது. வடக்கு கிழக்கில் பாரிய பிரச்சினைகள் யாவும் இந்த யூலை மாதத்தில் தான் நடைபெற்றது. இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு முனையில் ஜே.வி.பி அமர்ந்து இப்பொழுது செயற்பட்டுக்கொண்டு வருகின்றது.

1983 ஆண்டு யூலை மாதத்தில் வடக்கு-கிழக்கில் புலிகளால் கொல்லப்பட்ட இராணுவத்தினர் 13பேரது உடல்கள் கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டன.

எங்கேயோ ஒரு மூலையில் உறங்கிக் கிடந்த ஜே.வி.பி. தடைசெய்யப்பட்டதும் இதே யூலையில் தான். இதன்பிறகு ஜே.வி.பி கையில் ஆயுதம் ஏந்தியது.

அதன்பிறகு வடக்குகிழக்குப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவது தொடர்பாக 1987ஆம் ஆண்டு இந்திய இலங்கை



ஒப்பந்தம் யூலை மாதம் செய்யப்பட்டது. பின்னர் இந்த ஒப்பந் தத்திற்கு எதிராக ஜே.வி.பி நாட்டில் கலவரத்தை ஏற்படுத்திய படியால் மாபெரும் இரத்தக்களரி ஏற்பட்டது. ஆகவே அதற்குச் சிவப்புயூலை என்ற நாமத்தையும் சூட்டினார்கள்.

இன்று வடக்குகிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு கூட்டு ஒப்பந்தம் ஒன்றை அரசும், புலிகளும் செய்து கொண்டனர். இதற்கு எதிராக ஜே.வி.பி தற்பொழுது யுத்தப் பிரகடனம் ஒன்றையும் செய்துள்ளது. அதாவது ஆயுதமுனையில் அல்ல. பாராளுமன்றத் தேர்தல் மூலமாக இது பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இப்பொழுது யூலை மாதத்தில் சனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக ஜே.வி.பி பல கலவரங்களை உண்டுபண்ணப் போகிறது. இந்த யூலை மாதம் சந்திரிகாவோடு இணைந்த மாதம் என்று கூறுவார்கள். 1987ஆம் ஆண்டு சிவப்பு யூலை மாதத்தின் பொழுது இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு சந்திரிகா பூரண ஒத்துழைப்பை அன்றைய ஐக்கிய தேசியக்கட்சிக்கு வழங்கினார். அதன் காரணமாக சனாதிபதியின் கணவர் விஜய குமாரதுங்க ஜே.வி.பி.யினரால் படுகொலை செய்யப்பட்டார்.

இதே மாதத்தில் சுனாமி கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த யூலை மாதத்தில் இது நடந்துள்ளபடியால் சந்திரிகாவின் அரசும், ஜே.வி.பியினரால் கவிழ்க்கப்படும்.

சரித்திரத்தில் இரண்டு சம்பவங்கள் எங்கும் நடைபெற்றதில்லை. அதை ஜே.வி.பி மாற்றி அமைத்துள்ளது. 1987ஆம் ஆண்டு யூலை மாதம் இந்த நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் கடைசிக் காலமாகும். 1988ஆம் ஆண்டு யூலை மாதம் ஜே.ஆர் ஜயவர்த்தனா அடுத்த சனாதிபதித் தேர்தல் நடைபெறும் நாளை அறிவித்திருக்க வேண்டும். ஆனாலும் மறுபடியும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவருக்கு எண்ணம் ஒன்று இருந்தது. ஜே.ஆர்.ஜயவர்த்தனா இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்கி இனப்பிரச்சினையைத் தீர்த்து வைத்து இலங்கைச் சரித்திரத்தில் இடம் பெற்று ஓய்வு பெறுவதே இவரின் நோக்கமாக இருந்தது. ஆனால் ஜே.வி.பி யினர் இதற்கு இடம்கொடுக்கவில்லை. சமாதானம் சம்பந்தமாக அவரை ஓய்வு பெற்று வீட்டிற்கு அனுப்பவும் அவர்கள் இடம் அளிக்கவில்லை.

ஜே.ஆர்.ஜயவர்த்தனாவே வீட்டிற்குச் செல்லவும் என எல்லா இடங்களிலும் அவருக்கு எதிராக சுவரொட்டிகள் ஜே.வி.பி யினரால் ஒட்டப்பட்டது. அவரை ஒரு சர்வாதிகாரியாகவே ஜே.வி.பி யினர் சித்தரித்தனர்.

ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் கடைசி ஆட்சி ஆண்டின் இறுதியில் அவரால் அரசாங்கத்தை நடத்த முடியாத நிலைக்கு ஜே.வி.பி அவரை ஒரு சிறைக்கைதியாகவே வைத்திருந்தது. உத்தியோகப்பற்றற்ற அரசாங்கம் ஒன்றை ஜே.வி.பி நடத்திக்கொண்டு இருந்தது. ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் நிறைவேற்று அதிகாரங்கள் யாவும் அவரின் "வோர்ட்" பிளேஸ் எல்லைக்குள் ஜே.வி.பியினரால் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததென்பதை ஜே.ஆர்.ஜயவர்த்தனா அடிக்கடி கூறியிருந்தார். ஆகவே அவர் அடுத்துவரும் சனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்கு விரும்பவில்லை. ஆனால் அவருக்கு முப்படைகளின் அனுசரணைகள் இருந்தது. படைகளும் விசுவாசமாகவே நடந்து கொண்டபடியால் அவர் அரசியலில் ஒரு தைரியசாலி இராஜதந்திரியாகச் செயற்பட்டார். அதை எவராலும் மறக்க முடியாது.

அநேகமாக ஜே.வி.பி யினர் அத்தருணத்தில் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் அளவிற்குத் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஜே.வி.பி.யினர் இந்த நாட்டில் பிரகடனப்படுத்தப்படாத அரசாங்கம் ஒன்றை நடத்தி வருகின்றனர் என மக்கள் உணரத் தொடங்கினர். ஜே.வி.பி யினரின் ஆதிக்கம் இந்த நாட்டில் மேலோங்கி இருந்த வேளையில் ஜே.ஆர் ஜயவர்த்தனா சிறந்த முறையில் அரசியல் காய்களை நகர்த்தி ஜே.வி.பி யின் ஆதிக்கத்தை முறியடித்தார். இத்தருணத்தில் இந்த நாட்டில் சனாதிபதியாக எவர் பதவிவகித்தாலும் ஜே.வி.பி யின் எதிர்த்தாக்குதலைச் சமாளித்திருக்க மாட்டார்கள். இதை அவர் இராஜதந்திர மட்டத்தில் முறியடித்து ஜே.வி.பியை வளர விடாமல் கிள்ளி எறிந்து விட்டார்கள். இதனால் இவர் இலங்கைச் சரித்திரத்தின் ஒரு சிறந்த இராஜதந்திரியாகவே கருதப்பட்டார்.

அநேக சந்தர்ப்பங்களில் ஜே.வி.பி யினர் தமது அரசியல் நடவடிக்கைகளை நிறைவேற்றும் பொழுது அச்சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர்களின் நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு இடங்கொடுக்காமல் தனது அரசியல் காய் நகர்த்தலை வெற்றிகரமாக நிறைவேற்றியதுடன், தனது அதிகாரத்தை வெற்றிகரமாக நிலை நிறுத்திக்கொண்டார் ஜே.ஆர் ஜயவர்த்தனா.


ஜே.ஆர். ஜயவர்த்தனா அரசசுற்று நிருபங்கள் வெளியிடும் பொழுது ஜே.வி.பி யினர் அதற்கு எதிராகத் துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்தனர். ஜே.ஆர் இற்கு ஐந்தில் நான்கு பங்கு ஆதரவு பாராளுமன்றத்தில் இருந்தது. இந்தியாவின் உதவிகளும் இருந்தது. ஆனால் இவர்களின் இத் துண்டுப் பிரசுரங்களுக்காக தனது அதிகாரத்தைப் பாவிக்கவில்லை அமைதியாகவே இருந்தார்.

ஆனால் இன்று ஜே.வி.பி யினர்களுக்கு ஆயுதங்கள் கிடையாது. துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் செய்வதில்லை. ஆனால் 39 பாராளுமன்ற அங்கத்தவர்கள் இருக்கின்றனர். இவர்கள் இப்பொழுது ஊடகங்கள் மூலமாகவும், பத்திரிகைகளின் மூலமாகவும் வேலை நிறுத்தங்கள் மூலமாகவும் சனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தியுள்ளார்கள்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனா எப்படி முகம் கொடுத்தாரோ அதேபோல் இப்பொழுது சந்திரிகாவும் முகம் கொடுத்துள்ளார். இது சந்திரிகா ஆட்சியின் கடைசி வருடம். மறுபடியும் அரசியல் யாப்பை மாற்றி மீண்டும் சனாதிபதியாகலாம் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது.

இப்பொழுது அந்த எண்ணத்தை மாற்றி தற்பொழுது சுனாமி கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி நாட்டின் சரித்திரத்தில் முத்திரை பதிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். ஜே.ஆர் ஜயவர்த்தனாவுக்கு செய்தவைகளையே இப்பொழுது சந்திரிகாவுக்கு ஜே.வி.பியினர் செய்துகொண்டு வருகின்றார்கள். நிம்மதியாக அவரை அரசியலில் இருந்து விலகுவதற்கு இடம் கொடுக்கமாட்டார்கள். ஜே.ஆர் ஜயவர்த்தனா மரியாதையாக விலகி வீட்டுக்குச் சென்றார். சந்திரிகாவுக்கு சனாதிபதி பதவி இல்லாவிட்டாலும் கட்சியின் தலைமைப்பதவி தேவைப்படுகின்றது. ஜே.வி.பியினர் அதற்கு இடம்கொடுப்பார்களா என்று நம்ப முடியாது. ஏனென்றால் ஜே.ஆர் ஜயவர்த்தனாவை வீட்டுக்குப்போ என்று எழுதிய ஜே.வி.பி யினர் சந்திரிகாவை வீட்டுக்குப் போ என்று சுவர்களில் எழுதுவது பெரியகாரியமல்ல.

அன்று ஜே.ஆர் ஜயவர்த்தனா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்து ஜே.வி.பியை அடக்கினார். ஆனால் இன்று நிறைவேற்று அதிகாரம் இருந்தும் சந்திரிகா தனது அதிகாரத்தை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகிறார். அரசாங்கம் என்ற ஒன்று இன்று அவருக்கு இல்லை. இலங்கை அரசாங்கத்தில் சிறுபான்மை அரசாங்கம் என்றால் அது சந்திரிகாவின் அரசாங்கம் தான். சுனாமி கூட்டு ஒப்பந்தத்தின் பின் ஜே.வி.பி சந்திரிகாவின் சிறகுகளை வெட்டியுள்ளது.



இன்று அவர் ஒரு சிறகொடிந்த பறவை சந்திரிகாவை அரசியல் ரீதியில் ஒதுக்கி வைத்து சனாதிபதி மாளிகையில் ஒரு கைதியாகவே சிறைவைப்பதே ஜே.வி.பி யின ரின்



முழுத்திட்டமாகும். அவரின் நிறைவேற்று அதிகாரத்தை ஒரு செல்லாக்காசாக ஜே.வி.பி யினர் மாற்றுகின்றனர். தனது கடைசிக் காலத்தில் சந்திரிகாவின் தலைவிதி இப்படி மாறும் என அவர் நினைக்கவில்லை. மூன்று முறை இந்நாட்டில் தேர்தலைச் சந்தித்தவர். அடுத்து நாட்டின் சனாதிபதியாக வரமுடியாவிட்டாலும் பிரதமராக வருவதற்கு நினைத்துக்கொண்டு ஜே.வி.பி யினரை தனது கட்சியில் இணைத்துக் கொண்டார். ஆனால் கடைசியில் ஜே.ஆர் ஜயவர்த்தனாவுக்கு நடந்த கதிதான் சந்திரிகாவிற்கும் நடக்கப் போகிறது. ஆனால் வடக்கு கிழக்கு இனப் பிரச்சினைகளுக்கும், சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில் ஏதோ ஒருவகையில் சம்பந்தம் ஒன்று இருப்பதாக எமக்குத் தோன்றுகிறது. காரணம் ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் கடைசி ஆட்சிக்காலம் பரிதாபத்தில் முடிவடைந்ததுபோல் இன்று சந்திரிகாவின் ஆட்சிக்காலமும் வடக்கு கிழக்கு இனப்பிரச்சினையாலும், ஜே.வி.பி யின் அரசியல் காரணங்களினாலும் மிகப்பரிதாபமாக முடியப் போகிறது.

ஜே.ஆர் ஜயவர்த்தனா, சந்திரிகா மட்டும் அல்ல. சனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் கடைசிக்காலமும் ஜே.வி.பியின் அரசியல் நடவடிக்கை காரணமாக பரிதாபமாக முடிவடைந்தது. ஆனால் பிரேமதாசாவின் ஆட்சியில் ஜே.வி.பி ஒழிக்கப்பட்டது. ஜே.வி.பி யினர் ஆவியாக மாறி அவரை இல்லாதொழித்தது. அவரின் ஆட்சியில் அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப்பிரேரணையைக் கொண்டு வந்து லலித் அத்துலத்முதலியும், காமினி திசாநாயக்கவும் பிரேமதாசாவின் ஆட்சியில் இருந்து வெளியேறினார்கள்.

லலித் அத்துலத் முதலியின் கொலை பிரேமதாசாவின் தலையில் விழுந்தது. அதற்கும் ஜே.வி.பியினரின் ஆவிகள் தான் முழுக்காரணமாக இருந்ததென்று எம்மால் கூறமுடியும். இப்படிப் பார்க்கும்பொழுது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சியியும், ஜே.வி.பியும், வடக்கு கிழக்கு இனப் பிரச்சினையும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதமுடியும். இவைகளுக்கெல்லாம் முழுமையான காரணமாக விளங்குவது இந்தக் கறுப்பு யூலை மாதம் தான் என்பதில் ஐயப்பாடில்லை. இந்த கறுப்பு யூலை இல்லாவிட்டால் ஜே.வி.பி தடைசெய்யப்பட்டிருக்காது. வடக்கு கிழக்கு இனப்பிரச்சினையும் இவ்வளவு தூரம் இழுபட்டுக்கொண்டு போய் இருக்காது. இப்பிரச்சினைகள் எல்லாம் யூலை மாதத்தில் ஆரம்பித்தபடியால் இலங்கை சரித்திரத்தில் யூலை மாதத்திற்கு ஒரு முக்கிய இடத்தைக் கொடுக்கலாம்.

லங்காதீப ஞாயிறு வார இதழ்
உப்புள் ஜோசப் பெர்னாண்டோ
**மொழியாக்கம்- அ. சக்திவேல்**

# சேது சமுத்திரத்திட்டமும் இந்திய அரசியலும்

இந்திய மத்தியரசு பல்முனை எதிர்ப்புக்களுக்கு மத்தியில் சேதுசமுத்திரத் திட்டத்திற்கு பச்சைக்கொடிகாட்டியிருக்கின்றது. 145 ஆண்டு காலச் சுமைகளைக் கொண்ட இத்திட்டமானது இதுவரை காலமும் கிடப்பில் தூங்கி கொண்டிருந்தது. இப்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசே மீண்டும் இத்திட்டத்தை தூசு தட்டி, மெருகூட்டி தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டியிருக்கின்றது.

ஆனாலும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவோ சேதுசமுத்திரத் திட்டத்திற்கு சிவப்புக்கொடி காட்டுவதை இதுவரை நிறுத்தவில்லை. மீனவர்களுக்கு ஆபத்து விளைவிக்கும் இத்திட்டத்திற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பதில் தான் அவர் மிகுந்த ஆர்வத்தை காட்டியிருப்பது வெளிப்படை.

இந்தியாவுக்கு மிகவும் பல வகைகளில் நன்மை பயக்கும் என எதிர்பார்க்கும் இத்திட்டம் "தமிழன்" கால்வாய் எனும் பெயருடன் சி.ப. ஆதித்தனாரால் 1860 இற்கு முன்னர் முதலில் பேசப்பட்டது. ஆனால் 1860 இல் ஆங்கிலேயரால் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. அப்போதைய மதிப்பீடு ரூ.50 இலட்சமாகவே ஆங்கிலேயரால் கணிப்பிட்டபோதும் ஏனோ அவர்கள் இத்திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டனர்.

இந்தியா சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்கு முன்னர் எட்டுத் தடவைகள் ஆங்கிலேயர்களால் இத்திட்டம் கையில் எடுக்கப்படுவதும், கைவிடப்படுவதும் கிடப்பில்போடுவதுமாக இருந்தது. ஏனெனில் ஆங்கிலேயர் நிறையப் பணத்தை




இந்தியாவிலிருந்து சுரண்ட நினைத்தார்களே தவிர ஏதும் முதலீடு செய்ய அவர்கள் தயாராக இருக்கவில்லை என்பதைத் தான் இத்திட்டம் எடுத்தெடுத்து கிடப்பில் போனமைக்கு காரணமாக இருக்கமுடியும்.

இதனையடுத்து இந்தியா சுதந்திரக் காற்றை தம்வசப்படுத்தியதன் பின்னர் பேரறிஞர் அண்ணா பாராளுமன்றில் சேது சமுத்திரத் திட்டம் குறித்து குரலெழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுதந்திரத்தின் பின்னரும் ஏழு தடவைகள் சேது சமுத்திரத்திட்டம்பற்றி பேசப்பட்டிருக்கின்றது. இதில் ஓர் ஆச்சரியமும் உண்டு. 1994இல் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவே இத்திட்டம் குறித்து ஆராய ஒரு குழுவை அமர்த்தினார். என்பது குறிப்பிடக்கூடியதொன்று. இக்குழு ஆய்வில்இத்திட்டம் பூர்த்தியாக்க1200 கோடி ரூபா தேவை என்று கூறியமையும் தமிழக, முதல்வர் மத்தியரசிடம் இத்திட்டத்தை நிறைவேற்றி தருமாறு கேட்ட சங்கதியும் உண்டு.

அன்று சேது சமுத்திரத்திட்டம் பற்றி பேசிய தமிழக முதலமைச்சரே இன்று அதே திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பது ஒன்றுக்கொன்று முரணான விடயங்களே!

இதற்கு காரணம் என்னவாக இருக்க மடியுமென்று துருவிப்பார்த்தால்.......

தமிழகமுதலமைச்சர் எப்போதும் தன்னுடைய பிள்ளை சேது சமுத்திரத்திட்டம் என்று கூறுவதில்தான் பேரார்வம் கொண்டவர்.ஆனால் இன்றோ எதிர்க்கட்சிகளின் பிள்ளையாக சேது சமுத்திரத்திட்டம் அமுலாக்கப்படுவதால் மிகுந்த அசிரத்தை காட்டுவதாக ஏற்கனவே எதிர்க் கட்சிகள் வாய்கிழிய கத்திக்கொண்டு அறிக்கை விட்டும் கொண்டிருக்கின்றன.

எனவே எதிர்கட்சிகள் கூறுவது போலவே தான் இருக்குமோ ........ எனும் சந்தேகம்தான் இப்போது தமிழகத்தில் வலுத்திருக்கின்றது. இல்லையேல் முன்பு தானே முன்மொழிந்த சேது சமுத்திரத்திட்டத்தை இன்றுதானே வேண்டாமென்று கூறுவதற்கான காரணத்தைமுன் மொழியாதவரை அவர் மீதான சந்தேகம் தீர்வதற்கு வாய்ப்பில்லை.

சேது சமுத்திரத்திட்டம் பற்றி நோக்கின் ............................

இதுவரை இலங்கையினை சுற்றிச் செல்லும் கப்பல்கள் . நேரடியாக அரபிக் கடல் ஊடாக வங்கக்கடல் நோக்கி பயணிக்க முடியும். இதன்படி மன்னார் வளைகுடாவையும் பாக்விரிகுடாவையும் இணைக்கும் 167 கி.மீற்றர் நீளம் கொண்டதே சேது சமுத்திரக்கால்வாய் எனப்படுகின்றது.

இந்தக் கால்வாய் 300மீற்றர் அகலத்திற்கு 12 மீற்றர் ஆழமாக்கப்படவுள்ளது. அதுவும் ஆதம்பாலம் அருகே 35 கிலோ மீற்றர், பாக்கு நீரிணை பகுதியில் 54 கிலோ மீற்றர் நீளத்திற்கு மட்டுமேதான் ஆழப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு சேது சமுத்திரத் திட்டம் பூர்த்தியாக்கப்படுமானால் இருவழிப் பாதையாக சேது சமுத்திரக் கால்வாய் தொழிற்படும். இதனூடாக 20 ஆயிரம் டன் எடை கொண்ட அனைத்துக் கப்பல்களும் 30 ஆயிரம் டன் எடை கொண்ட கப் பல்களில் 75சதவீத கப்பல்களும் 40 ஆயிரம் டன் எடை கொண்ட கப்பல் களில் 10 சதவீத கப்பல்களும் 50ஆயிரம் டன்எடை கொண்ட இராட்சத கப்பல்களில் 5 சதவீதமும் இக்கால் வாயினை பயன்படுத்தமுடியும் என்பது இத் திட்ட ஆய்வின் முடிவு.

இத்திட்டம் இராண்டாயிரத்து நானூறுகோடி ரூபா செலவில் கடந்த சனிக்கிழமை தொடங்கப்பட்டுள்ளது.இத்திட்டம் மூன்றரையாண்டுகளில் பூர்த்தியாகும். 2025 ஆம் ஆண்டில் 7141கப்பல்கள் பயணிக்கமுடியும் என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே சேது சமுத்திரத்திட்டம் பற்றிய வார்த்தைப்போர் மும்முனைகளில்கடந்தாண்டில் நடந்திருக்கின்றது. பாரதிய ஜனதா ஆட்சியில் தி.மு.க. தலைவர் கருணாநிதி , ம.தி.மு.தலைவர் வைகோ ஆகியோர் சேது சமுத்திரத்திட்டம் பற்றி தாங்கள்தான் முதலில் மத்தியரசிடம் கோரிக்கை விடுத்தாக தங்களைத் தாங்களே மெச்சிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே தற்போதும் சேது சமுத்திரதிட்டத்திற்கு தி.மு.க. கருணாநிதி ,ம.தி.மு.க வைகோ இருவரும் ஆதரவுக் குரல் எழுப்புகின்றனர். ஆனால் தமிழக முதல்வரோ எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றார்.இதற்கு மற்றோர் காரணம் தி.மு.க. , ம.தி.மு.க. காங்கிரசின் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.மாறாக அ.தி.மு.க. ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு வெகு தூரத்தில் நிற்கின்றது.அதனால் சேது சமுத்திரத் திட்டத்திற்கும் தூரத்தில் நிற்கவே விரும்புகின்றது.

ஆனால் தமிழக எதிர்கட்சிகளோ சீப்பை ஒழித்து வைத்தக் கொண்டு திருமணத்தை நிறுத்த முடியாதுஎன்று மார்பு தட்டுகின்றன. சேது சமுத்திர திட்டத்தால் ஏற்படும் நன்மைகளை பட்டியலிடத் தவறவில்லை.


*கடற்படை மற்றும் கடலோர படை கப்பல்களின் வளர்ச்சி.

*இந்திய இலங்கையிடையே கண்காணிப்பு வலுப்படும்.

*கப்பல் வாடகை எரிபொருள் சேமிப்பு

*இந்திய கிழக்கு மற்றும் மேற்கு கடல் பகுதிகளுக்கு இடையே கப்பல் போக்குவரத்து தூரம் 424 கடல் மைல் அளவு குறைவும் பயண நேரம் குறையும்

## கனவல்ல, நிஜம்




*தென்னிந்திய கிழக்கு கடற்கரை துறை முகங்களில் ஒன்றுபட்ட போக்குவரத்திற்கென ஒருங்கிணைப்பு துறை முகமாக மேம்படும்.

போன்ற பிரதான நன்மைகளுடன் இன்னும் 13 மேலதிக நன்மைகளையும் பட்டியலிடத் தவறவில்லை.

இவ்வாறு சேது சமுத்திர திட்டத்தின் நன்மைகளை மட்டுமே பட்டியலிட்டுள்ள மத்தியரசும் தமிழக எதிர்க்கட்சிகளும் இத்திட் டத்தின் தீமைகள் குறித்து வாய் திறக்கவே இல்லை எனலாம்.

அதாவது நாணயத்திற்கு இரண்டு பக்கம்இருப்பதுபோல் நன்மை இருக்குமிடத்தில் தீமை இல்லாது இருப்பதற்கு வாய்ப்பே இருக்க முடியாது என்பது யாவரும் அறியாததல்ல.

எனவே தீமைகளை நோக்கின் .........

*இலங்கை மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

*கடலிலுள்ள பவளப்பாறைகள் அழிக்கப்படவுள்ளன.

*கடல்போக்குவரத்து அதிகரிக்கும் பட்சத்தில் டொல்பின் திமிங்கலம் பாதிப்படையும்.

*அபூர்வ வகை மீன்களின் சரணாலயமாக இருக்கும் பகுதியே ஆழப்படுத்தப்படவுள்ளதால் அந்த சரணாலயம் அழிவுறும்.

*கடலின் அடியில் தோண்டபடவுள்ளதால் தண்ணீர் ஓட்டம் அதிகரிக்கும். தோண்டப்பட்ட இடம் நிரம்பி விடும்.

*கூடுதலாக இலங்கையின் பொருளாதாரம் கடுமையாக பாதிப்படையும்.

இவ்வாறு சமூக சுற்றுச்சூழலில் பல விளைவுகள் ஏற்படும் என்றுகூட எதிர்வு கூறப்படுகின்றது.



எனவே தனது நாட்டிற்கு தீமைகள் அதிகளவு ஏற்படாது என்பதாலும் வேறு நாடே (இலங்கை) அதிகம் பாதிப்புக்களை சுமக்கவுள்ளது என்பதனாலுமே தான் மிகவும் சுயநலத் தன்மையில் செயற்படுவதாக விமர்சனம் எழாமல் இல்லை.

ஆனால் எல்லாவற்றையும் மூடி மறைத்து மத்தியரசு தீமைகள் எதுவுமில்லை என சேது சமுத்திரத்திட்டத்தை பூர்த்தியாக்குவதில் மும்முரமாக இயங்குகின்றது.

அ.கலைவாணி

"தமிழனின்" கால்வாய் என்று புகழ்பெற்ற சேது சமுத்திரத்திட்டமானது ஒரு கையால் பூவை அள்ளி கொடுக்கும்போது மறுகையால் மற்றொரு நாட்டை குரல் வளையில் நசுக்கப் போகின்றது என்பதும் ஒரு விமர்சனம்.

ஏற்கனவே தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் இலங்கை சனாதிபதி கலந்துரையாடியமை இதுவரை வெளிவரவில்லையென்றும் தமிழக முதலமைச்சர் வேற்றுநாட்டுடன் சேர்ந்து சேது சமுத்திரதிட்டத்தைகுழப்ப சதி செய்கின்றாரா..... என்று புலனாய்வுத்துறையினர் தகவல் திரட்ட ஏற்பாடு செய்யப்படுவதாகவும் தகவல் கசிகின்றது

எனவே இலங்கை இந்திய உறவுகளை துண்டித்து இரு துருவங்களாக்கவே சேது சமுத்திரதிட்டம் மீண்டும்அவதாரம் எடுத்துள்ளதா......? என்பதே இன்றைய வினாவாகும்!

-பொதுக்கட்டமைப்பில் அரசு சார்பில் கையொப்பமிட்ட-

# ஜெயசிங்கவை நிதிச்செயற்குழு முன்

# ஆஜராகி விளக்கமளிக்கப் பணிப்பு

கடல்கோள் அனர்த்த நிவாரணப் பணிகளுக்காக அரசாங்கமும்,விடுதலைப்புலிகளும் இணைந்து உருவாக்கியுள்ள பொதுக்கட்டமைப்பிற்கான உடன்படிக்கையில் அரசாங்கத்தின் சார்பில் கையெழுத்திட்ட புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்கவை நாளை பாராளுமன்றத்தில் ஆஜராகி எந்த அதிகாரத்தின் அடிப்படையில் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டார் என அரச நிதிச் செயற்குழுவுக்கு விளக்கமளிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் இணைந்து அமைத்துள்ள பொதுக்கட்டமைப்பின் கீழ் பிராந்தியக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி அதிகாரங்கள் இலங்கையின் அரசியலமைப்பின் உறுப்புரைகள் 148,149 என்பவற்றுக்கு முரணாக இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க அரசியலமைப்புக்கு முரணான இவ் உடன்படிக்கையில் எம்.எஸ் ஜெயசிங்க, தனக்கு வழங்கப்பட்ட எந்த அதிகாரத்தின் அடிப்படையில் கையெழுத்திட்டார் என்பதை விளக்க வேண்டுமென அரசாங்க நிதிச் செயற்குழுவின் தலைவருக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இலங்கையின் அரசியலமைப்பின் படி பொது நிதிகளின் மீது பூரண கட்டுப்பாடு பாராளுமன்றத்துக்கே உரித்துடையதாக்கப்பட்டுள்ளது. எனவே ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு அரச நிதிச்செயற்குழுவின் முன் ஆஜராகி விளக்கமளிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளது.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் கைச்சாத்திட்டுள்ள பொதுக் கட்டமைப்பின் படி கடல் கோளினால் பாதிக்கப்பட்டுள்ள ஆறு மாவட்டங்களிலும் கடல் கோளுக்கு பின்னரான கரையோர நிதியம் என்ற பெயரில் அமைக்கப்படும் நிதியமே வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதிகளைக் கையாளும் என்பதும் இந்த நிதியத்தின் கணக்கீடுகள் அரசாங்க கணக்காளரினால் அல்லாமல் சுயேச்சையான கணக்காளரினாலேயே மேற்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஏற்கனவே பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வரும் நிலையில் தற்போது அமைச்சின் செயலாளர் பாராளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# எட்டு தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு அரசு பணம், ஆயுதங்களை வழங்கியது

## -பாராளுமன்றில் ரீ.மகேஸ்வரன்

(கொழும்பு)

தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்வதாக பாதுகாப்பு அமைச்சின் மீது ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரீ.மகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்றின் நேற்றைய முன்தின அமர்வில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அரசாங்கம் நிராகரித்துள்ளது. இது குறித்து பதிலளித்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் பதிலை ரீ. மகேஸ்வரன் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையில் தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் எட்டுத் தமிழ் குழுக்களுக்கு அரசாங்கம் பணம், ஆயுதம் உள்ளிட்ட உதவிகளைச் செய்து வருவதாகவும் இதனை விரைவில் தான் வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார். (32)

# பந்து கடந்தபின் "சிக்சர்" அடிக்க முடியாது ஒற்றுமை தேவை என்கிறார் அஸ்வர்

விக்கெட் காப்பாளரை பந்து கடந்து சென்றதன் பின்னர் சிக்ஸர் அடிக்கும் பம்மாத்து ஆட்டக்காரரைப் போன்றுதான் வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அரசியல் ஆட்டம் ஆடுகின்றார்கள் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

இங்குள்ள அரசியல் தலைவர்கள் எனக் கூறுபவர்கள் வாதம், விவாதம், இராஜினாமா என்ற நாடகங்களை அரங்கேற்றுகின்றனர். ஆனால் எவரும் இதுவரையில் எதனையும் சாதித்ததாகத் தெரியவில்லை.

எமக்குப் பொதுக்கட்டமைப்பு தேவை, எமது உரிமைகளை நாம் பெறவேண்டும். அதற்காக நாம் குரல் கொடுக்க வேண்டும். இதற்காக எமக்குள் [illegible]ற கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். இதனை யாரும் மறுக்கவில்லை. நாங்கள் பிரிந்து நிற்பதுதான் வேதனை தருகின்றது.

தனித்துவமாக வந்தோம், உரிமையைக் காக்க வந்தோம், இவற்றுக்கெல்லாம் வந்த நாம் இன்று எவ்வாறெல்லாம் பிரிந்து நிற்கின்றோம். இவ்விடயத்தில் நான் ஒரு முஸ்லிம் சகோதரன் என்ற முறையில் உங்களிடம் கேட்க விரும்புவது பொதுக் கட்டமைப்பு வருவதற்கு முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமையான கட்டமைப்பு இருக்கவில்லை.

பந்தை தவற விட்டு விட்டீர்கள். இனி சிக்ஸர் அடிக்க முடியாது. நீங்கள் ஒன்றாக ஒரு மேசையில் இருப்பவர்கள். ஒரு அமைச்சரவையில் இருப்பவர்கள். ஒன்றாக இருந்து ஒருமித்துப் பேசவில்லை. அதற்காக வருந்துகின்றோம். தமிழர்கள் ஒரு குடையின் கீழ் வந்துவிட்டார்கள். ஒரு குரலிலே பேசுகின்றார்கள். அல்லா கூறியது போன்று ஒன்றுபட்டவர்களுக்கு வெற்றி கிடைத்திருக்கின்றது.

இலங்கையில் கிழக்கு மாகாணம் பெரும்பான்மையான முஸ்லிம்களைக் கொண்ட பிரதேசம். இது முஸ்லிம்களின் தாயகம். இப்பிரதேசத்தில் அடுத்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை பொதுமக்களாகிய நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாம் அடித்துக் கொள்வதை விடுத்து, இராஜினாமாச் செய்வதை விடுத்து, போட்டி போடுவதை தவிர்த்து ஒற்றுமையுடன் செயற்பட்டு முஸ்லிம் மக்களுக்கு உதவி செய்ய முன்வாருங்கள் என அறை கூவல் விடுத்தார்.


# கேள்வி அறிவித்தல்

வீடமைப்பு, நிர்மாணத்துறை, கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு

## கட்டடங்கள் திணைக்களம்

01 யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரியில் நிர்வாகப் பிரிவுக் கட்டட மேம்படுத்தலும், திருத்துதலுக்குமான சீலிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபைத் தலைவரால் 2005.07.27 மு.ப 10.00 வரை கோரப்படுகின்றன.

02 கேள்விப்பத்திரங்கள் 2005.07.20 ஆம் திகதி பி.ப 3.30 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமான ரூபா ஆயிரம் மட்டும் (ரூபா 1000.00) செலுத்தி யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

03 கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம் கடற்கரைவீதி, கட்டங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04 கேள்விதாரர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் (இக்டாட்) அபிவிருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் தரம் எம் 8 மற்றும் அதற்கு மேல் கட்டட நிர்மாண ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்துகொண்ட மற்றும் இலங்கை தேசிய நிர்மாண சங்க அங்கத்தவராயுமிருத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் பெறுமுன் ஒப்பந்தகாரர் பதிவுப்புத்தகம் NCASL அங்கத்துவ அட்டை என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05 பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாணம் கடற்கரை வீதி,கட்டடங்கள் திணைக்களம், மே/பா பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச்சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

06 தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

07 கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விபரங்கள் யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். (021-2222781.

*W.S. மொல்லிகொட,*
*கட்டடங்கள் பணிப்பாளர்,*
*கட்டடங்கள் திணைக்களம்,*
*"செத்திரிபாய"*
*ஸ்ரீஜயவர்த்தனபுர,கோட்டே, பத்தரமுல்ல.*

(சி.12308)


# சிவராம் படுகொலை வழக்கு சாட்சிகளுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

சிவராம் கொலை தொடர்பான அடையாள அணிவகுப்பு கடுவெல நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறுமுகம் சிறிஸ்கந்தராஜா அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டபோதும் எவரும் அடையாளம் காட்டவில்லை.

சிவராம் கடத்தப்பட்டதை நேரில் கண்டதாக தெரிவிக்கும் குசல பெரேரா உட்பட்ட ஆறு பேர் சாட்சி கூற முன்வந்திருந்தபோதும் எவரும் மேற்குறிப்பிட்ட சந்தேகநபரை அடையாளம் காட்டவில்லை. இவர்களுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தலே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

கடும்பாதுகாப்புடன் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்ட சந்தேகநபரை படம் பிடிப்பதற்கு ஊடகத்துறையினருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும், இவ் வழக்கு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### *காயமடைந்தவர் மரணம்*

இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினராக செயற்பட்ட ஆட்டோ சாரதியான தங்கராஜா ராஜோதயன் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார். இவர் இராணுவத்தளபதி சாந்தகொட்டேகொடவின் விசேட புலனாய்வுப்பிரிவு குழுவில் செயற்பட்டு வந்தவர் என்றும், இவரது மனைவி பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தராக திருமலை பொலிஸ்நிலையத்தில் சேவையாற்றுகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### *இளைஞர் சுட்டுக்கொலை*

பொலநறுவையில் அழகக தொழிலாளியான மகாலிங்கம் அருளானந்தம் அல்லது நாசர் (வயது-29) என்பவர் கடந்த திங்கட்கிழமை இரவு சுட்டுக்கொல்லப்பட்டார். பொலநறுவை முஸ்லிம் காலனியில் வசித்து வரும் இவர் சம்பவதினமிரவு கடையை மூடிவிட்டு கடையின் பின்பக்கம் சமையல் செய்து கொண்டிருந்த போது இனந்தெரியாத இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். சுட்டுக் கொல்லப்பட்ட மகாலிங்கம் அருளானந்தம் அல்லது நாசர் வவுனியாவைச் சேந்தவர். இஸ்லாம் மதத்தை தழுவியவர். இவர் சில காலம் புத்தளத்தில் தங்கியிருந்து விட்டு தற்போது முஸ்லிம் காலனியில் வசித்து வந்துள்ளார்.

## கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

மண்ணில் மலர்வு 15 - 02 - 1968



மண்ணில் உதிர்வு 06 - 07 - 2005

திருமதி.சுசீலா. லோகேஸ்வரன்
இல.146,கட்சன் வீதி
வட்டக்கச்சி.

**சுசீலா எனும் நாமம் கொண்டு – எம்**
**கண்முன்னே பொம்மி என உலவி**
**உளமெலாம் உறைந்திட்ட உத்தமியே**
**பதினான்கு ஆண்டுகளாய் – எங்கள்**
**பொருண்மியம் மேம்பட உழைத்தவளே**
**எமக்கெலாம் தங்கையாய், அக்காவாய் நின்று**
**நாளும் அன்புடன் வளிகள் சொன்னவளே**
**இரவென்ன பகலென்ன சொன்னபணி முடிப்பவளே**
**எமைவிட்டெங்கு சென்றாயோ ...**
**பொம்மியே எங்கள் மனம் தவிக்கிறது – என்றும்**
**உன் நினைவுடன் வாழ்வோம், பணிகளைத் தொடர்வோம்.**

"இன்று கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குகிறோம்."

பணிப்பாளர்,போராளிகள்,
பணியாளர்கள்,
த.பொ.மே.நிறுவனம்,
நடுவப்பணியகம்,
வட்டக்கச்சி.

(சி.12309)

யாழ்ப்பாணம்

# அயோத்தி தாக்குதலைக் கண்டித்து

# நேற்று நாடு தழுவிய போராட்டம்

## இந்தியாவில் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





(புதுடில்லி)

அயோத்தியில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைக் கண்டித்து பாரதிய ஜனதாவும் சங்பரிவார் அமைப்பும் நேற்று நாடு தழுவிய போராட்டத்தை நடத்தியது.

இதன் காரணமாக பி.ஜே.பி ஆட்சியிலுள்ள மாநிலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மத்தியபிரதேச மாநிலத்தில் பா.ஜ.கா மற்றும் விஸ்வஹிந்து பரிசத் தொண்டர்கள் ஹிந்து விமான நிலையத்துக்குள் புகுந்து விமான மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு புறப்படத் தயாராக இருந்த மும்பை செல்லும் தனியார் விமானத்தை ஓடு தளத்தில் தடுத்து நிறுத்தினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பின்னர் பொலிசார் அவர்களை அப்புறப்படுத்தினர். எனினும் விமான நிலையத்திலுள்ள முக்கிய பிரமுகர்களுக்கான அறையை அக்கும்பல் அடித்து உடைத்தது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு உயரதிகாரிகள் விரைந்துசென்று விமானப் போக்குவரத்துக்களைச் சீர் செய்தனர்.

இது போன்று ஹிந்து ரயில் நிலையத்திலும் பா.ஜ.கா.வினர் இணைந்து மறியலில் ஈடுபட்டதால் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் பி.ஜே.பி. பரிவார் அமைப்புக்கள் நடாத்தும் கதவடைப்பால் மாநிலம் முழுவதும் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் ரயில் மற்றும் சாலைப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

உத்தரப்பிரதேசத்திலும் முழு அடைப்பிற்கு அழைப்பு விடுத்ததனால் அங்கு பதற்றம் நிலவியது.

இதேவேளை குஜராத் மாநிலம், அகமதாபாத், காந்திநகர், பதோதரா ஆரத் உள்ளிட்ட பகுதிகளிலும் வெள்ள பாதிப்புக்களையும் மறந்து ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தியுள்ளனர்.

இந்த நாடுதழுவிய போராட்டம் காரணமாக அனைத்து மாநிலங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தீவிரவாதத்தை ஒடுக்குவோம்; இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதி

(புதுடில்லி)

தீவிரவாதத்தை ஒடுக்குவோம் என்று இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார்.

அயோத்தியில் ராமர் கோவிலை தீவிரவாதிகள்தகர்க்க நடந்த முயற்சியை அறிந்ததும் பிரதமர் மன்மோகன்சிங் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் கூட்டத்தில் கலந்துகொண்டு அயோத்தியில் நடந்த சம்பவங்களை விளக்கினார். அதைத் தொடர்ந்து மன்மோகன்சிங் கூறியதாவது,

தீவிரவாதம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. அதை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க அரசு உறுதிபூண்டு இருக்கிறது. அயோத்தியில் நடந்த சம்பவத்தை அரசு கடுமையாக கருதுகிறது.இது துரதிர்ஷ்டவசமானது.மதவழிபாட்டுத் தலங்கள், நினைவுச் சின்னங்கள், பாதுகாப்புக் கேந்திரங்கள் போன்றவற்றைப் பாதுகாக்க முழு உஷார் நிலையில் இருக்கும்படியும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் படியும் அனைத்து மாநிலங்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

தீவிரவாத சக்திகள் தங்கள் கொடிய திட்டத்தை நிறைவேற்ற அரசு அனுமதிக்காது.

மத நல்லிணக்கம், அமைதி, பொது ஒழுங்கு நிலைநாட்ட தகுந்த கவனம் செலுத்தப்பட்டு இருக்கிறது.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் கொல்லப்பட்டுவிட்டனர். தற்காலிக ராமர் கோவிலுக்கு எந்தச் சேதமும் ஏற்படாதது அதிஷ்டவசமானது என்று கூறினார்.

அயோத்திச்சம்பவம் பற்றி ஐக்கிய முற்போக்குக் கூட்டணித்தலைவா சோனியாகாந்தியிடமும், மன்மோகன் சிங் விளக்கினார்.

நேற்று முன்தினம்மாலை அரசியல் விவகாரத்திற்கான மத்திய அமைச்சரவை குழுக் கூட்டத்தை பிரதமர் மன்மோகன்சிங் கூட்டினார். நாடு முழுவதும் செய்யவேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதில் விவாதித்தார். மன்மோகன்சிங் நேற்று முன்தினம் குஜராத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களை விமானத்திலிருந்து பார்வையிடுவதாக இருந்தது. அயோத்தி சம்பவத்தால் அந்தப் பயணத்தை ரத்துச்செய்தார்.

# அயோத்தியில் பாபர் மசூதி இடிப்பு வழக்கு; அத்வானியை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

பாபர்மசூதி இடிப்பு வழக்கில் அத்வானியை ரேபரேலி நீதிமன்றம் விடுவித்தது தவறு என அலகாபாத் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் 2003 இல் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி,உமாபாரதி ஆகியோரை ரேபரேலி நீதிமன்றம் விடுவித்தது.இதை எதிர்த்து அலகாபாத் உயர்நீதிமன்றில் மெகபூப், முகமது சித்திக் ஆகியோர் மனுத்தாக்கல் செய்தனர். இதனை விசாரித்த அலகாபாத் உயர்நீதிமன்று இவ்வழக்கில் ரேபரேலி நிதிமன்றம் அத்வானி உள்ளிட்டோரை விடுவித்தது தவறு என்றும் இவர்கள் ஜுலை 28இல் நீதிமன்றில் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

# இளைஞர்கள் முயன்றால் இந்தியா வளர்ச்சிபெறும்

–அப்துல்கலாம்

இளைஞர்கள் முயன்றால் இந்தியா வளர்ச்சி பெறும் என இந்திய சனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.

கோவை எட்டிமடை அமிர்தா விஷ்வ வித்யாபீட நிகர்நிலைப் பல்கலைக்கழகததில் கிராமப்புற ஆதார வள மைய தொடக்கவிழா நேற்று நடந்தது. விழாவில் சனாதிபதி அப்துல் கலாம் கலந்துகொண்டு தொடங்கி வைத்தார். இந்த மையங்களின் தொடர்புகளை அவர் செயற்கைக் கோளுடன் இணைத்துவைத்தார். பின்னர் அவர் பேசும்போது;

இந்தியாவில் 60 ஆயிரம் கிராமங்கள் உள்ளன. இந்தியமக்கள் தொகையில் 70சதவீதம் மக்கள் கிராமப்புறங்களில் வசித்து வருகிறார்கள். இந்தியா சுதந்திரம் அடைந்து 50 வருடங்கள் ஆகிறது. ஆனால் இதுவரை கிராமப்புறங்கள் முக்கியத்துவம் பெறவில்லை. இது போன்ற கிராமப்புற ஆதார வள மையங்கள் அமைப்பதன் மூலம் கிராமங்களும் போட்டிக்கு தயாராகின்றன. இந்த மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் மீனவர்களுக்கும் தேவையான தகவல்கள் அளிக்கப்பட்டுவருகிறது.


அதாவது கடலின் தட்பவெப்ப நிலை, மீன்கள் அதிகம் உள்ள இடம் போன்ற மீனவர்களுக்குத் தேவையான பல அரிய தகவல்கள் அளிக்கப்படுகிறது.

இந்த மையம் அமைக்கப்பட்டதன் மூலம் கிராமங்கள் வளர்ச்சி அடையும். இந்த மையங்கள் கிராம மக்களுக்குத் தேவையான தகவல்களை மட்டும் அளிக்காமல் மக்களின் அறிவு மையங்களாகவும் விளங்க வேண்டும்.

மேலும் மேம்படுத்தப்பட்ட விவசாய தகவல்கள் மற்றும் மீனவர்களுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் அளிக்க வேண்டும்.


கடந்த நூற்றாண்டைவிட இந்த நூற்றாண்டில் நாட்டில் விவசாயம் மிகுந்த வளர்ச்சி அடைந்து வருகிறது. விவசாயத்துறையில் புதிய கண்டுபிடிப்புகள் அதிகரிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## அயோத்தியில் தாக்குதல் நடந்த இடம்







சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதியின் உடல்



அயோத்தியில் பாதுகாப்புக்கு குவிக்கப்பட்ட பொலிசார்.



தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடந்தபின் அங்கு கூடிய மக்கள்.



அயோத்தி தாக்குதலை அடுத்து டில்லி ஜும்மா மசூதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சம்பியனானது

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்திய மட்டுப்படுத்திய பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டப் போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இவ் இறுதிப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணியினர். 39.1பந்துபரிமாற்றங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து யங்ஸ்ரார் அணி சார்பில் எ. துஷ்யந்தன் 63 ஓட்டங்களையும் தினேஷ் 43 ஓட்டங்களையும், எஸ். விஜயகர்ணன் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் வி. வினோசன் எட்டு ஓவர்கள் பந்து வீசி 52 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களையும், ரி. பிரகாஷ் எட்டு ஓவர்கள் பந்து வீசி 43 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியினர் 36.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் க. ஜங்கரன் 58 ஓட்டங்களையும், எஸ்.உமானாத் 28 ஓட்டங்களையும், பெற்றுக் கொண்டனர்.

யங்ஸ்ரார் அணிசார்பில் பந்து வீசிய எஸ் ரஜித் எட்டு ஓவர்களில் 40 ஓட்டங்களுக்கு நாலு விக்கெட்டுக்களையும், எச்.கிருஸ்ணச் சந்திரா எட்டுஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு விக்கெட்டுக்களையும்,எஸ். சசிவர்ணன் எட்டு ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், எஸ். உமானாத் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ். ராஜீவன் சிறந்த களத்துடுப்பாளராகவும் எஸ். துஷ்யந்தன் சிறந்த து பாட்ட வீரராகவும், எஸ். ரஜித் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வி.வினோசன் சிறந்த பந்துவீச்சாளராக தெரிவுசெய்யப் பட்டார். (41)

# கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு மரதன் ஓட்ட நிகழ்வு

கரும்பு தினத்தை முன்னிட்டு துணுக்காய் பிரதேசத்தில் கடந்த திங்களன்று மரதன் ஓட்ட நிகழ்வு இடம்பெற்றுள்ளது.அன்று காலை ஆறு மணியளவில் பாண்டியன் குள பிரதேசப் பொறுப்பாளர் சி. இலக்கியன் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில் 25 இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டியை துணுக்காய்ப் பிரதேச காவல்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் வதனகுமார் போட்டியில் பங்குபற்றிய வீரர்களுக்கு கைகொடுத்து ஆரம்பித்துவைத்தார். மரதன் ஓட்ட நிகழ்வானது மாங்குளம் வழியாக 14 கிலோமீற்றர் தூரம் கொண்ட வன்னி விளாங்குளம் சந்தியைச் சென்றடைந்ததும் அங்கு அம்பாள்புர வலயப் பொறுப்பாளர் செந்தூரன், துணுக்காய் காவல்பணிமனை துணைப்பொறுப்பாளர் மார்தண்டன் ஆகியோர் வரவேற்று பாராட்டுத்தெரிவித்தனர். (24)

# தென்மராட்சி கழகங்களுக்கிடையிலான கால்பந்து சுற்றுப்போட்டி ஆரம்பம்

தென்மராட்சிப்பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே தென்மராட்சிப் பிரதேச உதைபந்தாட்ட சபையினால் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியொன்று நடத்தப்பட்டுவருகின்றது.

கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டிகளை சம்பிரதாய பூர்வமாக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் சி.மாதுளன் பொதுச் சுடரினை ஏற்றி ஆரம்பித்துவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுத்துறைப் பொறுப்பிாளர் ஏற்றி வைத்தார்.

வீரர்களுக்கு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் வலிகாமம் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். (41)

# 2012இல் நவீன ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பை லண்டன் பெற்றது





30ஆவது நவீன ஒலிம்பிக் போட்டிகளை 2012 ஆம் ஆண்டு நடத்தும் வாய்ப்பை லண்டன் பெற்றுள்ளது. சிங்கப்பூரில் நேற்று நடைபெற்ற 117ஆவது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி மாநாட்டில் நான்கு சுற்று வாக்கெடுப்பை அடுத்து 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்தும் நகரம் லண்டன் என சர்வதேச ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒன்பது நகரங்கள் தெரிவு செய்யப்படும் அவற்றில் லண்டன், நியூயோர்க், பரிஸ், மட்ரிட், மொஸ்கோ ஆகிய ஐந்து நகரங்கள் இறுதித் தெரிவுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன.

# ஐ.சி.சி யின் புதிய விதிவெற்றி அளிக்குமா? பரீட்சார்த்த முயற்சி இங்கிலாந்தில் இன்று




ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பதில் வீரரை அனுமதிக்கலாம் என்ற விதி முறைக்கேற்ப இன்று லோட்சில் ஆரம்பமாகும் நட்வெஸ்ட் தொடரின் மேலதிக மூன்று ஒரு நாள் தொடரில் அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகள் பரபரப்பை ஏற்படுத்தவிருக்கின்றன.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய அணி பயிற்றுநர் புக்கானன் தெரிவிக்கும்போது. பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப்படும் இந்த மாற்றம் வெற்றியளிக்கும் பட்சத்தில் எதிர்காலப் போட்டி களில் இதை நிரந்தரமாகப் பின்பற்றலாம் எனத்தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரு அணிகளினதும் முழுப்பலமும் தெளிவாகத் தெரிந்துவிடுவதோடு எந்த அணியிலும் 15 வீரர்கள் நிச்சயம் இடம்பெறலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

பதில் வீராக இங்கிலாந்து அணியின் மட்பிரியரை இங்கிலாந்து அணி தெரிவு செய்துள்ளது. ஆயினும் அவுஸ்திரேலியா கடைசி நேரம்வரை தனது மேலதிக வீரரை அறிவிக்கவில்லை.

# மூன்று நாடுகள் ஒருநாள் போட்டி முரளிதரன் விளையாடமாட்டார்?




இலங்கை கிரிக்கெட் அணி மேற்கிந்தியத்தீவுக்கு எதிராக இரண்டு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடுகிறது. அதனைத் தொடர்ந்து அந்த அணி மூன்று நாடுகள் போட்டியிலும் ஆடுகிறது.

இலங்கை தொடரில் இருந்து மேற்கிந்தியத்தீவு நட்சத்திர வீரர் லாறா உட்பட முன்னணி வீரர்கள் பலர் ஏற்கனவே விலகிவிட்டனர். தற்போது இலங்கையின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும் இந்தத் தொடரில் இருந்து விலகியுள்ளார். விலகுவதற்கான காரணத்தை அவர் கூற மறுத்துவிட்டார்.

காயம் காரணமாக முரளிதரன் கடந்த சில மாதங்களாக சர்வதேச போட்டிகளில் ஆடாமல் இருந்து வருகிறார் ஒரு சில கவுண்டி போட்டிகளில் மட்டுமே அவர் ஆடிவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யா வீராங்கனை புதிய உலகசாதனை



ரஷ்யாவின் தடகளப்போட்டி வீராங்கனையான யெலினா இசின்பயெவா கோலூன்றிப்பாய்தல் போட்டியில் மீண்டும் புதியசாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

லோசன் என்ற இடத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் 4.93 மீற்றர் (உயரம்) பாய்ந்தார். சுமார் மூன்று மாதத்துக்கு முன்பு இவர் 4.89 மீற்றர் பாய்ந்து சாதனை படைத்தார். தற்போது அதனை விட தசம் நான்கு மீற்றர் அதிகம் பாய்ந்துள்ளார்.

இது பற்றிக் கூறும்போது; தனது இலக்கு ஐந்து மீற்றர்கள் பாய்வதே என்றும், சிலவேளை 5.10 மீற்றராகவும் அது இருக்கலாம் என்றும் தெரிவித்தார். இப்போது நடத்திய சாதனை தனக்கு பெரும் மகிழ்ச்சியளிப்பதாகவும், எனினும் இது சுலபமான காரியமல்ல என்றும் தெரிவித்துள்ளார். இவரது பயிற்சியாளர் தெரிவிக்கும்போது, பயிற்சிகளின்போது இவர் ஐந்து மீற்றர்வரை பாய்ந்துள்ளதாக யெவ்கணிடொபிமோ தெரிவித்தார்.

# வாக்கெடுப்பு நடத்துவது எப்படி?

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியில் மொத்தம் 116 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் 99 பேர் மட்டுமே வாக்குப் போடுவார்கள். இதில்50 வாக்குப்பெறும் நகரம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் இதில் வாக்குப் போடமாட்டார். சமநிலையில் முடிந்தால் மட்டுமே அவர் வாக்குப் போடுவார்.

முதல்சுற்றில் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு மட்டுமே உண்டு. முதல் சுற்றின் முடிவில் எந்தஒரு நகரமும் 50உம், அதற்கு மேலும் வாக்குகள் பெறவில்லை என்றால் அதனைத் தொடர்ந்து மீண்டும் வாக்கெடுப்பு பல சுற்றுகளாக நடக்கும்.

இதில் குறைந்[illegible] வாக்குகளை பெறும் நகரங்கள் வெளியேற்றப்படும். இறுதியில் அதிக வாக்குகள் பெறும் முதல் இரண்டு நகரங்கள் மட்டுமே போட்டியில் நேரடியாக மோதும் அப்போது அந்த 99 பேரும் மீண்டும் வாக்களிப்பார்கள்.

# வீரர்கள் மீது அனுதாபப்பட்டால் அணிக்கு வெற்றி கிடைக்காது






- சப்பல் -

இந்திய அணி தேர்வுக்குழு உறுப்பினர்களும், பயிற்சியாளர்களும் கடுமையாக நடந்துகொள்ள வேண்டும். மாறாக அவர்கள் வீரர்கள் மீது அனுதாபப்பட்டால் அணிக்கு வெற்றி கிடைக்காது என இந்திய அணியின் பயிற்சியாளர் சப்பல் தெரிவித்துள்ளார். நன்றாக ஆடும் வீரர்களை மட்டுமே அணியில் சேர்க்க வேண்டும். மோசமாக ஆடும் வீரர்களின் ஆட்டத்தை பொறுத்து அவர் களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். மேலும் இதுவரை வாய்ப்பு கொடுக்கப்படாத வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். இவ்வாறு கிரேக் சப்பல் கூறினார்.

# வாய்ப்பு கிடைத்தால் விளாச தயார்


**- தோனி**

'மீண்டும் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கும் வாய்ப்பு கிடைத்தால் விளாச தயார்' என்கிறார் இந்திய அணியின் விக்கெட்காப்பாளர் தோனி.

இந்திய கிரிக்கெட் அணிக்கு கிடைத்த புதிய வரவு விக்கெட்காப்பாளர் மகேந்திரசிங் தோனி பாகிஸ்தானுக்கு எதிராக விசாகப் பட்டினத்தில் நடந்த ஒருநாள் போட்டியில் 123பந்தில் 148 ஓட்டங்கள் குவித்தவர் பெங்களூர் பயிற்சி முகாமில் நேற்று முன்தினம் கிடைத்த சிறிய இடைவேளையில் இவர் அளித்த பேட்டியில் இந்திய அணியில் மீண்டும் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கும் வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறேன். அந்த வாய்ப்பு அமைந்தால் எனது வழங்கமான ஆட்டத்தை வெளிப்படுத்தத்தயார் தொடக்கம் என்றில்லை.. மூன்றாவது, ஏழாவது நிலையில் இறங்கச் சொன்னாலும் கவலையில்லை என்றார்.

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு



தங்களுடைய உயிரையும், உடைமைகளையும் பாதுகாக்கும் சக்திவாய்ந்த தேசிய இராணுவத்தின் உதவியுடன், சுதந்திர தமிழீழ நாடு நிறுவப்பட்டால் ஒழிய,ஒருபோதும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்கப் போவ தில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 07-07-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## உலகிற்கு வெளிக்காட்டவே

பொதுக்கட்டமைப்பில் அரசாங்கத்தின் சார்பில் கைச்சாத்திட்ட புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலர் எம்.எஸ் ஜெயசிங்காவை நாளை வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் ஆஜராகி எந்த அதிகாரத்தின் அடிப்படையில் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார் என அரசநிதிச் செயற்குழுவிற்கு விளக்கமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல்யாப்பின்படி பொதுநிதிகளின் மீது பூரண கட்டுப்பாடு பாராளுமன்றத்திற்கே உரித்தாக்கப்பட்டுள்ள நிலையில் கடற்கோளுக்குப் பின்னரான கரையோர நிதியம் என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள நிதியமே வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதிகளைக் கையாளும் என்பதும் இந்நிதியத்தின் கணக்காய்வுகள் சுயேச்சையான கணக்காய்வாளர்களினாலேயே மேற்கொள்ளப்படும் என்பதும் அரசியல் யாப்பிற்கு மாறானது என ஜே.வி.பி எழுப்பிய குற்றச்சாட்டை அடுத்தே எம்.எஸ் ஜெயசிங்கா விளக்கமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளார்.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வது பொதுக்கட்டமைப்பிற்கான நிதியத்தை முடக்குவதற்கு பாராளுமன்றத்தில் உள்ளும் வெளியிலுமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளளுதல் போன்ற செயற்பாடுகளில் பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் மேற்கொள்வார்கள் என்பது எதிர்பார்க்கப்பட்ட தொன்றே.

ஆகையினால் தற்பொழுது ஜே.வி.பி யின் நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்டதே. ஆனால் இதிலுள்ள சிறியதொரு வித்தியாசம் கடந்த காலத்தில் எனின் இத்தகைய நடவடிக்கைகளை பிரதான எதிர்க்கட்சியே மேற்கொண்டிருக்கும். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ஐ.தே.க அவ்வாறு செயற்படமுடியாத நிலையில் உள்ளது. இந்நிலையில் ஜே.வி.பி அவ்வெற்றிடத்தை நிரப்புகின்றதெனலாம்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதும் அதன் நிதிக்கொள்கை பாராளுமன்றத்தின் அதிகராத்திற்கு உட்படாததென்பதும்,சிறிலங்கா அரசியல்யாப்பிற்கும் மாறானதென்பதும், ஏற்கனவே வெளிவந்ததொன்றுதான். அதாவது அரசாங்கத்திற்கு இது தெரியாமல் மேற்கொண்ட விடயமல்ல. அரசாங்கத்திற்கு இது நன்கே தெரியும்.

ஐ.தே.கட்சி அரசாங்கத்துடன் தாய்லாந்தில் விடுதலைப்புலிகள் நடத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் உடனடி மனிதாபிமான தேவைகளுக்கு என அமைக்கப்பட்ட சிரான் அமைப்பும் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாகவே செயலிழந்து போனது. அரசியல் யாப்புவிதிகளை மீறியதாக சிரானின் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. அக்கட்டமைப்பே செயலிழந்து போனது.

இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பு இத்தகையதொரு நெருக்கடிகயைச் சந்திக்குமென எதிர்பார்க்கப்பட்டதே. ஆயினும் அரசாங்கத்தரப்பு உறுதியான நிலைப்பாட்டின் மூலம் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் அரசாங்கம் அவ்வாறான முயற்சி எதையும் மேற்கொண்டதாக இல்லை.

அதுமட்டுமன்றி அரசாங்கம்–அதாவது ஆளும் கட்சியினர் எடுக்க வேண்டிய பொறுப்பை அதிகாரிகள் மட்டத்தில் எடுத்ததன் மூலமே இத்தகைய விளக்கங்கள் அளிக்க வேண்டியதேவை எழுந்துள்ளது. அரசியல் வாதிகள் இப்பொறுப்பை எடுத்திருந்தால் இத்தகைய விளக்கம் அளித்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்க மாட்டாது.

இலங்கையின் அரசியல்யாப்பு என்பது ஒற்றையாட்சியை வலுப்படுத்தும் வகையிலானதொன்றாகும். இன்னும் தெளிவாகக் கூறுவதானால் ஒற்றை ஆட்சியை வலுப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டதொன்றாகும். இந்நிலையில் இனப்பிரச்சினைக்கோ அன்றி வேறு எத்தகைய விடயங்களுக்காகவோ ஒற்றையாட்சி முறையில் இருந்து மாறுபட்டதான அமைப்பொன்றை உருவாக்குதல் என்பது அரசியல் யாப்பிற்கு இசைவானதாக இருக்க மாட்டாது.

ஆகையினால் பொதுக்கட்டமைப்பு போன்றவற்றை உருவாக்க முற்படும்போது அவற்றை அமுல்செய்வதற்கு அதிகாரத்தில் உள்ளவர்கள் உறுதியுடன் செயற்பட வேண்டும். நாங்கள் உடன்பாட்டில் கையொப்பமிடுவோம், அது பின்னர் அரசியல் யாப்பினால் அடிபட்டுப் போகும் என்ற உணர்வுடன் செயற்பட்டால் உடன்பாடுகளில் அர்த்தமில்லை.

இந்நிலையில் இவ் உடன்பாடுகளுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் தாம் உடன்பாட்டை தடுத்து நிறுத்திவிட்டதாக பெருமிதம் கொள்ளலாம். ஆட்சியாளர்கள் மீண்டும் ஒருமுறை தமிழரை ஏமாற்றிவிட்டதாக மகிழ்ச்சி கொள்ளலாம். ஆனால் இவர்கள் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். தமிழ்மக்களின் தேசியத்தலைமையும் தமிழ்மக்களும் இவற்றை விளங்கிக்கொள்ளாமல் இல்லை. இனப்பிரச்சினையிலும். தமிழ்மக்கள் தொடர்பான மனிதாபிமான பிரச்சினையிலும் சிங்களப் பேரினவாதம் எந்தளவுக்கு விட்டுக்கொடுப்பற்ற வெறித்தனத்துடன் நடந்துகொள்கின்றதென்பதை உலகிற்கு வெளிக்காட்டவே அதாவது தமிழ்மக்கள் போராடுவதற்கான நியாயத்தை உலகமும் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே ஆகும்.

# 40 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு திட்டத்தில் 2 ஆயிரம் பேருக்கே நியமனம்!

### ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 40ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் இரண்டாயிரம் பேர் மட்டுமே நிரந்தர வேலைவாய்ப்பினைப் பெற்றிருப்பதாக ஜே.வி.பி. சார்பு பட்டதாரி ஊழியர் கூட்டு ஒன்றியத்தின் இணைப்பாளர் சந்தன சூரியாராய்ச்சி குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் சிலர் தமக்கு நெருக்கமானவர்களுக்கு மாத்திரமே தமது அமைச்சில் நிரந்தர தொழில் வாய்ப்பினை வழங்க முயன்றுவருவதாக தமக்குத் தகவல் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அவர் மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஆட்சிப்பொறுப்பேற்ற கூட்டமைப்பு அரசாங்கத்தின் இந்த 40 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதிக்குள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்குவது என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும், அதற்கான உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் பட்டதாரிகள் ஊழியர் கூட்டு ஒன்றியத்தின் இணைபபாளர் சந்தன சூரியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

# பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கைக்கு எதிராக ஜே.வி.பி மேலும் மூன்று மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி மேல் நீதிமன்றத்தில் மேலும் மூன்று மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், நந்தன குணதிலக ஆகியோர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

நிவாரணம், மீளமைப்பு, புனர்நிர்மாண அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க, கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் ரஞ்சன், நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோர் இந்த மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கமானது, சிறிலங்கா அரசியலமைப்பின் 148ஆம், 149ஆம் சட்டங்களுக்கு முரணானதென தமது மனுக்களில் குறிப்பிட்டிருக்கும் ஜே.வி.பியினர், இதனால் அரச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அத்துடன் வடக்கு கிழக்கு பகுதிகள் முற்றாக வேறுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிக ஹெல உறுமயவும் நேற்று முன்தினம் இரண்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் முடியும் வரையில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தடைவிதிக்குமாறு அதன் மனுவில் கோரிக்கை விடுத்திருக்கும் ஜாதிக ஹெல உறுமய அத்துடன் சிங்களவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாட்டுக்கும், மக்களுக்கும் பயனற்ற கட்சியாகவே ஜே.வி.பி உள்ளது

### ஜாதிக ஹெல உறுமய செயலர் சாடல்

(கொழும்பு)

நாட்டு மக்களுக்கும், நாட்டிற்கும் எந்தவொரு பயனுமற்ற, கொள்கை இல்லாத கட்சிதான் ஜனதா விமுத்தி பெரமுன என்று ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் ஓமல் பேசோபித்ததேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய ஒரு பிற்போக்கு வாதக்கட்சி. அது தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளவில்லை , சனநாயக கோட்பாடுகள் இல்லாத கட்சி அதனால் அதன் நிலைப்பாடுகளில் தெளிவில்லை என கூறுவதற்கு ஜே.வி.பி. தலைவருக்கு எந்தவொரு அருகதையும் இல்லை.

சிங்களவர் சிறிலங்காவில் வரலாற்று இனமாகவும், தமிழ் முஸ்லிம் இனங்கள் ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி சிறுபான்மை இனமாகவும் உரிமைகள் உள்ளதுடன் பௌத்தம் அல்லாத ஏனைய சமயங்களுக்கு அவற்றைப் பின்பற்றக்கூடிய உரிமையும் உள்ளது.

ஜாதிக ஹெல உறுமய தற்போதுள்ள அரசியல்முறையை ஏற்றுக்கொண்டு அதனை சனநாயக முறையில் நடைமுறைப்படுத்தவே விரும்புகின்றது.

மாக்சிச லிபரல் வாதக் கொள்கைகளைக்கைவிட்டு சனநாயக முறையில் வாக்களித்த பொதுமக்களின் கை விரல்களை வெட்டியும் கொலைச்சம்பவங்களில் ஈடுபட்டவர்களின் அரசியல் கொள்கைகளை விட உயரிய அரசியல் கொள்கையுடன் எமது கட்சியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு 3500 பேர் இலக்காகியுள்ளனர்

### உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மொத்தமாக மூவாயிரத்து 500பேர் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுக்கு ஆளாகியிருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இலங்கையில் 614 பேர் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். என்று உள்ளூர் கணிப்பீடுகள் கூறுகின்றபோதிலும், இது வெறுமனே ஒரு உத்தியோகபூர்வ கணக்கெடுப்பே என்று கூறும் உலக சுகாதார ஸ்தாபனம் உண்மையான எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதைவிட மிக அதிகமானது என்றும் கூறியுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் எயிட்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் மதிப்பீடுகளின்படி இலங்கையில் சுமார் மூவாயிரத்து 500 எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுள் பெரும்பாலானவர்கள் நாட்டின் முக்கிய ஆக்கத்துறை சார்ந்தவர்கள் என்றும், சாரதிகள், விடுதித் தொழிலில் ஈடுபடுவோர், இராணுவத்தினர், ஆசிரியர்கள், கலைஞர்கள் எனப் பல தரப்பட்டவர்களும் இதில் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எயிட்ஸ் நோய் அபாயம் அதிகம் காணப்படாத தெற்காசிய நாடுகளுள் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றபோதிலும், இது மேலும் அதிகளவில் பரவக்கூடிய ஆபத்துக் காணப்படுவதாகவும், இதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் உலக சுகாதார ஸ்தாபனமும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்துறை அமைச்சும் இணைந்து மூன்று வருடத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வருப்பதாகவும் அறிவிக்கப் படுகிறது.

# மேல் நீதிமன்ற நீதிபதி கொலை வழக்கு; மரண தண்டனைக் கைதிகள் மேன்முறையீடு

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் பொலிஸ் பரிசோதகர் உபாலி அமரசிங்க ஆகியோரைப் படுகொலை செய்தமை சம்பந்தமாக திங்கட்கிழமை மரணதண்டனை விதிக்கப்பட்ட நௌபர் உட்பட்ட ஐவரையும் விடுதலை செய்யுமாறுகோரி இவ்வாரத்தினுள் உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்யவுள்ளதாக சட்டத்தரணி லக்ஷ்மன் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் தீர்ப்பை வழங்கியது மேல்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவென்பதால் மேன்முறையீடு செய்ய வேண்டியது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்ல உயர் நீதிமன்றத்திலேயே எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகளில் சாட்சிகளின் முரண்பாடு காணப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வழக்கறிஞர்கள் எழுத்து மூலம் நீதிமன்றத்திற்கு அறிவித்தபோதிலும் தீர்ப்பு வழங்கியபோது நீதிபதிகள் அதுபற்றிக் கவனம் செலுத்தவில்லை என்றும், அதனால் அவர்கள் ஐவரையும் விடுதலை செய்யுமாறு தான் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்போவதாகவும் லக்ஷ்மன் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

# மாவீரர்களின் இலட்சியக் கனவு நனவாக எம் தலைவரின் கரங்களை பலப்படுத்துவோம்

## மட்டக்களப்பு கட்டளைத்தளபதிபானுஅழைப்பு

நாம் அடிமைகளாக வாழக்கூடாது தமிழினம் வாழ்வதற்கு என்று நாடு வேண்டும். அதற்காகவே பதினேழாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்கள் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். அவர்களின் இலட்சியக் கனவை வென்றெடுப்பதற்கு தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் பங்



காளிகளாக மாறி தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்த வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

இற்றைக்கு 18 ஆண்டுகளுக்கு முன்பாக இன்றைய தினத்தில் முழு இலங்கையையும் அதிரப் பண்ணும் படியாக ஒரு சம்பவம் நடந்தது. எமது விடுதலைப் போராட்டத்தில் கரும்புலி கப்டன் மில்லர் அவர்கள் தனது வீர தீரச் செயலை மேற்கொண்டார்.

கரும்புலிகள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் வெற்றிகளை ஈட்டித்தந்தனர். இவர்கள் மூலம் இராணுவத்தினரின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தி அவர்களின் மு[illegible]னேற்றங்கள் சீர்குலைக்கப்பட்டன. இராணுவத்தினரின நடவடிக்கையை முற்றிலும் தடுத்து நிறுத்தி அவர்களை கதிகலங்க வைத்தனர் இந்தக் கரும்புலிகள். இதுவரை காலமும் நடைபெற்ற விடுதலைப் பேராட்ட வரலாற்றில் 263 கரும்புலிகள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துள்ளனர்.

இவர்களுடைய அர்ப்பணிப்பு தமிழீழம். இவர்களுடைய கனவுகள் ஒரு நாளும் வீண் போகக்கூடாது அதற்கு மக்களாகிய நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். அணிதிரள வேண்டும் அத்துடன் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்களாகிய நீங்கள் பக்கபலமாக நிற்கவேண்டும் என்றார்.

### விசாரணைக்கு...

யில் பாயவிடப்பட்டிருந்த மின்சாரம் தாக்கிகடற்றொழிலாளர் ஒருவர் உயிரிழந்தமை தெரிந்ததே. இந்த கடற்றொழிளரின் உயிரிழப்புக்கு இராணுவத்தின் பாதுகாப்பு வலயகெடுபிடிகளே காரணம் என்றும், குருநகர் மீனவர்களது இயல்பானதும். சுதந்திரமானதுமான கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு படையினர் வழிவிட வேண்டும் என்றும் தெரிவித்து குருநகர் கடற்றொழிலாளர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் முறையிட்டுள்ளனர். இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணை இன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முற்பகல் பத்து மணிக்கு இடம்பெறவுள்ளதால் இதற்கு யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள 51 ஆவது டிவிசனின் கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் பன்னிப்பிட்டிய மற்றும் அதிகாரிகளை விசாரணைக்கு வருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (33,27)

### பொதுக்கட்டமைப்பு..

திகதி இந்த மனுமீதான விசாரணை நடத்தப்படவுள்ளது. இதேவேளை மனுதாரரின் மனுவில் கோரப்பட்டிருந்த பொதுக்கட்டமைப்பு மீதான இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்கமுடியாது என பிரதமநீதியரசர் தெரிவித்தார். (32)

### கார்....

இடம்பெற்றதாகத் தெரியவந்துள்ளது. யோகபுரம் மல்லாவியை சேர்ந்த சிவஞானசுந்தரம் கஜீபன் (வயது-25) என்ற மருத்துவபீட மாணவரே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்து அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்க ஆயத்தமாகையில் வைத்தியசாலையில் மரணமானவராவார். மற்றும் சு. சுரஞ்சன் (வயது-28), பி. சபேசன் (வயது -27) என்ற இரண்டு மருத்துவபீட மாணவர்களும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (சோ,கு,தீ,24)

### கருவேப்பங்...

காணப்படுவதாகவும், இதனால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். கருவேப்பங்கேணியை அண்டியுள்ள ஜெயந்திபுரம், இருதயபுரம், ஊரணி, போன்ற இடங்களில் இரவு வேளையில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

### கரும்புலிகள்...

நாள் இன்றாகும். இன்று நாம் நினைவில் கொள்ளும் கரும்புலி மாவீரர்கள் நம் தேசத்திற்காக தம்முயிர்களை ஈந்தவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர்களைத் தெரியாதவர்கள் அவர்களை கடும் மனம் படைத்தவர்களாக எண்ணுவது உண்டு. உண்மை அதுவல்ல.

சாதாரண மனிதர்களை விட மென்மையான உள்ளம் படைத்தவர்களாக வாழ்ந்தவர்கள் கரும்புலி மாவீரர்கள். பொதுவாக எல்லா மனிதர்களையும் போலவே உயிர் வாழ்வதற்கான தேவையும் விருப்பமும் கரும்புலிகளுக்கும் உண்டு.

ஆனால் நம் தேசத்தின் மீதும் தாம் பெற்றுக்கொண்ட கடமையின் மீதும் அவர்கள் கொண்ட உறுதிப்பாடு வாழ்வதற்கான அவர்களது விருப்பத்திற்கு மேலாக தம் கடமைக்காக உயிர் கொடுப்பதற்கான உறுதியை அவர்களுக்கு தருகின்றது.

கரும்புலி வீரர்கள் தமது இறுதி விரும்பமாய் விடுதலையையும் தேசியத் தலைவரின் எண்ணங்களையும் தாங்கிச் சென்றதைக் கண்டிருக்கின்றோம் அவர்களது விருப்பமான தேச விடுதலையைப் பெற்று தமிழீழ தேசத்தை சுதந்திர பூமியாக உருவாக்குவதே அந்த கரும்புலி வீரர்களின் உயிர்க்கொடைக்கு நாம் செலுத்தும் கடனாக அமையும்.

கரும்புலி வீரர்கள் ஒவ்வொருவரினது பிரிவின் போதும் அவர்களால் கிடைத்த வெற்றியினால் தலைவர் அவர்கள் ஒருபுறம் வெற்றிப் பெருமிதத்துடனும், மறுபுறம் தனது வீர்களது பிரிவின் ஆற்றாமையோடும் ஒரு கலந்த மன நிலையோடு இருப்பதைக் கண்டுள்ளேன்.

கரும்புலி வீரர்கள் ஒவ்வொருவரினதுஇழப்பும், பிரிவும் எல்லோருக்கும் மனச்சுமையை ஏற்படுத்தும் ஒன்றுதான். ஆனால் தேசவிடுதலையின் தவிர்க்க முடியாத தேவையாக அந்த மாவீரர்களின் பணி அமைந்துள்ளது.

கரும்புலி வீரர்களின் அர்ப்பணிப்பு தேவையான ஒன்றானதாக இருக்கின்றது. தமிழீழத் தேசியத்தின் தடைகளை அகற்றி விடுதலையை விரைவுபடுத்துவதற்கு கரும்புலிகளின் அர்ப்பணம் அவசியமான தொன்றாகின்றது.

அந்த அர்ப்பணிப்பில் மனந்திறந்த நிலையிலே கரும்புலிகளை நினைவுகூரும் நாம் இன்று ஒரு விடயத்தில் உறுதி கொள்ள வேண்டும். கரும்புலிகளின் தற்கொடையால் வரும் வெற்றிகளை நல்ல தொழில் நுட்பவளத்தாலும், நல்ல இராணுவப் பலத்தாலும் அவற்றைப் பெறுவதற்கான பொருளாதார பலத்தாலும் ஈட்டமுடியும். அதை ஈட்டுவதில் உலகில் உள்ள தமிழர் எல்லோரும் தமிழ்த் தேசியத்தின் பின்னே அணிதிரள்வதற்கான உறுதியை கரும்புலிகள் நாளான இன்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

### நாட்டின்...

டுள்ளது. இப் பேரணியில் கலந்துகொண்டோர் மத்தியிலேயே அவர் இவ்வாறு கூறினார். (32)

### ஐவர்...

பேரில் சிறிலங்காப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். நேற்று முன்தினம் இரவுகளனி, இரத்மலானை ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

### கொக்லண்ட்..

டாரங்கள் தெரிவித்துள்ளன. சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் ,பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர், மற்றும் பொலிஸ் அதிகாரிகளையும் சந்திப்பார் எனத்தெரிவிக்கப்படுகிறது. நாளை வெள்ளிக்கிழமை காலை சம்பூர் சென்று திருகோணமலை அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலனைச்சந்தித்து கலந்துரையாட உள்ளதாகவும், அன்றையதினம் பிற்பகல் அவர் கொழும்பு திரும்பி விடுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## துயர்பகிர்கின்றோம்

மண்ணில் மலர்வு 15 □ 02 □ 1968



மண்ணில் உதிர்வு 06 □ 07 □ 2005

**திருமதி.சுசீலா லோகேஸ்வரன்(பொம்மி)**

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடுவப்பணியகம்.**

தமிழீழ நிர்வாக சேவை கிளிநொச்சி மாவடடத்தின் நிர்வாக உத்தியோகத்தர் கிருஷ்ணபிள்ளை லோகேஸ்வரன் (ராம்கி) அவர்களின் துணைவியார் சுசீலா அவர்கள் 06-07-2005 நேற்று அகாலமரணம் அடைந்ததையிட்டு அதிர்ச்சியடைவதுடன், அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,
தமிழீழ நிர்வாக சேவை,
தமிழீழம்.

(சி.12314)

மெகா
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
10-07- 2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
யாழ்ப்பாணம் சுன்னாகம்
சாவகச்சேரி நெல்லியடி கிளிநொச்சி
(சி-12146)

## சாவு அறிவித்தல்கள்

### சிவஞானசுந்தரம் கஜீபன்

**இல. 701, மல்லாவி, யோகபுரத்தை சொந்த வசிப்பிடமாகவும், வயம்ப பல்கலைக்கழகம் 3ஆம் வருட மாணவனுமாகிய சிவஞானசுந்தரம்கஜீபன். 6.07.2005 புதன்கிழமை மல்லாவியில் அகாலமரணமடைந்துவிட்டார். அன்னார் சிவஞானசுந்தரம் சிவலோகநாயகியின் அன்பு மகனும், சுபாஜினி (சுவிஸ்), சிவகாந்தி (ஆசிரியர் மு/உயிலங்குளம் அ.த.க. பாடசாலை), தயாளன்(மட்டக்களப்பு வெளிவாரிபல்கலைக்கழகம), லோஜினி (மு/யோகபுரம் ம.வி ) ஆகியோரின்அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.**

தகவல்:-
சி.சிவகாந்தி
(ஆசிரியர்)
மு/உயிலங்குளம் அ.த.க. பாடசாலை.

(6340)



திருமதி-லோகேஸ்வரன் சுசீலா (பொம்மி)

கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் (விவசாய பாடசாலை திருநெல்வேலியை) பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இல-94 கட்சன் வீதியில் வசித்து வந்தவரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நடுவப்பணியகத்தில் செய்தி வெளியீட்டுப் பிரிவில் பணிபுரிந்தவருமாகிய திருமதி-லோகேஸ்வரன்(ராம்கி) சுசீலா (பொம்மி) அவர்கள்.06-07-2005 நேற்று அதிகாலைஅகாலமரணமாகிவிட்டார். அன்னார் லோகேஸ்வரன் (ராம்கி) தமிழீழ நிர்வாக சேவை, கிளிநொச்சி அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற பத்மலிங்கம் சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மகளும், கிருஸ்ணசாமி சுப்புலட்சுமியின் மருமகளும் ,பத்மகுமார் (ஜேர்மனி), காலம் சென்ற பமீலா,லதா,பிரேமிலா(லைலா), நிர்மலா (நிம்மி) ஆகியோரின் அன்பு சகோதரியும் சண்முகானந்தன் (விநாயகர் ஸ்ரோர்ஸ்) கல்கமுவ முருகதாஸ் (ரவிராஜ்) (தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் S.M.S என்ஜினியர்ஸ், நடேசகுமார் (இந்திரன்-உந்துருளி திருத்துநர் முள்ளியவளை), மக்கி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருசிகா, கிருசாந்தன், சுலக்சன்,சுலக்சனா,கர்ணன்,கீர்த்தனா ஆகியோரது சிறியதாயாரும், வரோடிக்கா, ரெலிகிஸ்ராஸ், சாமுவேல்,தபேகா ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல-146 ,கட்சன்வீதி, வட்டக்கச்சி இல்லத்தில் 07-07-2005 இன்று பி.ப 1.00 மணிக்கு நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் பன்னங்கண்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:- சி.லோகேஸ்வரன்(ராம்கி)
கணவர்.

(6341)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.